# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. VI Issue 5 August 2016

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| லைப் டிவைன் . . . . . . . . . . . . . . | 4 |
| இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . | 12 |
| சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . | 13 |
| யோக வாழ்க்கை விளக்கம். . . . . . | 15 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள் | 21 |
| அஜெண்டா . . . . . . . . . . . . . . . | 24 |
| வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள் . | 26 |
| ஸ்ரீ அரவிந்தரின் ஆன்மிக சிந்தனைகள் - பாகம் 1 . . . . . . | 28 |
| **The Life Divine – Outline** . . . . . . | 31 |
| நெஞ்சுக்குரிய நினைவுகள் . . . . . | 36 |
| அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . | 39 |
| அன்பர் அனுபவம் . . . . . . . . . . . | 45 |
| **அன்னை இலக்கியம்** மீன்கொடி. . . . . . . . . . . . . . . . . | 48 |


### ஜீவியத்தின் ஓசை

**சுதந்திரம் சிருஷ்டியில் பிரம்மம்.**

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

**ஸ்ரீ அரவிந்தம்**

## லைப் டிவைன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

ஆங்கிலம்: லெஸ்லி ஜேக்கப்ஸ்
தமிழாக்கம்: வித்யா ரங்கன்

## II/1. Indeterminates, Cosmic Determinations and the Indeterminable

Page 302
Para 7

This opens the way for other explanations.
They make Consciousness the creator of this world.
It has created it out of an apparent original Inconscience.

A Mind, a Will seems to have imagined and organised the universe.
But it has veiled itself behind its creation.

Its first erection has been this screen of an inconscient Energy.
It has erected a material form of substance.
That is at once a disguise of its presence.
It is also a plastic creative basis on which it could work.

Like an artisan it uses for his production of forms a dumb obedient material.
What we see around us are the thoughts of an extra-cosmic Divinity.



## II/1. பிரபஞ்ச சிருஷ்டி பிரம்ம சிருஷ்டி

இது பிற விளக்கங்களுக்கான வழியைத் திறக்கிறது.
ஜீவியம் இவ்வுலகத்தைச் சிருஷ்டித்ததாகக் கூறுகின்றனர்.
மூலமானதும், தோற்றத்தில் ஜட இருளாக உள்ளதும் ஆன ஒன்றிலிருந்து அதை உருவாக்கியுள்ளது.
ஒரு மனம், ஒரு உறுதி கற்பனை செய்து, பிரபஞ்ச அமைப்பை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது.
ஆனால் அதன் சிருஷ்டிக்குப்பின் அது தன்னை மறைத்துள்ளது.
ஜட இருளின் சக்தி அதன் முதல் வெளிப்பாடு.

அது பொருளின் ஜட ரூபத்தை எழுப்பியுள்ளது.
ரூபம் சக்தியை மறைத்துள்ளது.
மேலும் அது தான் செயல்படக் கூடிய ஒரு நெகிழ்வான சிருஷ்டித் திறன் கொண்ட அடிப்படையாகவும் உள்ளது.
ஒரு கைவினைஞனைப் போல் அது ரூபங்களை உருவாக்க தனக்கு மௌனமாகப் பணியும் பொருளை உபயோகிக்கிறது.
நம்மைச் சுற்றி உள்ளவைகள் பிரபஞ்சத்தைக் கடந்த ஒரு தெய்வத்தின் எண்ணங்கள்.

It is a Being with an omnipotent, omniscient Mind and Will.

It is responsible for the mathematical law of the physical universe.
It is responsible for its artistry of beauty.

Also for its strange play of samenesses and variations.

It is responsible for the concordances and discords.

It combines and intermingles opposites.

It creates the drama of consciousness struggling to exist.

It seeks to affirm itself in an inconscient universal order.

This Divinity is invisible to us.
It is undiscoverable by our mind and senses.

This offers no difficulty.
We could not expect the direct sign of an extra-cosmic Creator.
Since it is a cosmos which is void of his presence.

There are patent signals everywhere of the works of an Intelligence.
There are signs of law, design, and formula.



அது சர்வ வல்லமை மற்றும் சர்வ ஞானத்தோடு கூடிய மனத்தையும் உறுதியையும் பெற்ற ஒரு ஜீவன்.

அது ஜடப்பிரபஞ்சத்திற்குரிய கணித சாஸ்த்திரத்தின் உத்தரவாதி.

அது கலை நயம் கொண்ட அதன் சௌந்தர்யத்தின் பொறுப்பாளி.

மேலும், ஒரே வகையான தன்மை மற்றும் பல்வகைத் தன்மை எனும் விநோதமான லீலையின் காரணி.

முரண்பாடுகள் மற்றும் உடன்பாடுகளுக்கும் அதுவே பொறுப்பு.

அது எதிரானவைகளைச் சேர்க்கும் மற்றும் ஒன்றோடொன்று இணைக்கும்.

வாழ்வின் ஜீவியப் போராட்ட லீலையை அது உற்பத்தி செய்கிறது.

ஜட இருளான பிரபஞ்ச அமைப்பில் அது தன்னை உறுதி செய்யும் நாட்டம் கொண்டது.

இந்த இறைமை நம் கண்ணுக்குத் தெரிவதில்லை.

நம் மனத்தாலும் புலனறிவாலும் அதைக் கண்டுகொள்ள முடியாது.

இருந்தாலும் இதில் கடினமேதுமில்லை.

பிரபஞ்சத்தைக் கடந்த சிருஷ்டிகர்த்தாவின் நேரடியான அறிகுறிகளை நாம் எதிர்பார்க்க முடியாது.

ஏனெனில் நாம் அறிந்த பிரபஞ்சம் இறைவனின் இருப்பற்ற சூன்யமானது.

அங்குக் கூர்மையான ஒரு அறிவின் செயல்பாடு தனியுரிமை பெற்ற அறிகுறிகளாக எங்கும் வெளிப்பட்டுள்ளது.

அங்குச் சட்டம், திட்டம் மற்றும் சூத்திரம் இவற்றின் அடையாளக் குறிப்புகள் உண்டு.

There is adaptation of means to end.

There is constant and inexhaustible invention, even fantasy.

But they are restrained by an ordering Reason.

This might be considered sufficient proof of this origin of things.
Or this Creator may not be entirely supracosmic.

He may be also immanent in his works.

Even then there need be no other sign of him.

Only when some consciousness evolved.

It might become aware of the indwelling Presence.

The intervention of this evolving consciousness would not be a difficulty.
There would be no contradiction of the basic nature of things in its appearance.
An omnipotent Mind could easily infuse something of itself into its creatures.
One difficulty remains.
It is the arbitrary nature of the creation.
It is the incomprehensibility of its purpose.
It is the crude meaninglessness of its law.



அங்கு விளைவுகளுக்கேற்றவாறு வழிவகைகளை மாற்றிக் கொள்ளும் அமைப்பிற்கான ஏற்புத்திறன் உண்டு.
அங்கு இடைவிடாத மற்றும் வற்றாத புதியன புனைதலும் புனைவாற்றலும் உண்டு.
ஆனால் அவை பகுத்தறிவால் முறைப்படுத்தப்பட்டு அடக்கி வைக்கப்பட்டுள்ளன.
இவை மூலமான விஷயங்கள் இருப்பதை போதுமான அளவு நிரூபணம் செய்கின்றன.
அல்லது சிருஷ்டிகர்த்தா என்பவர் முழுவதுமாக பிரபஞ்சத்தைக் கடந்த நிலையில் இல்லாமல் இருக்கலாம்.
அவர் பிரபஞ்சத்தில் தன் செயல்பாட்டினுள்ளும் உறைபவராக இருக்கலாம்.
இருந்தாலும் அவர் இருப்பதன் வேறு அறிகுறிகள் அங்குத் தேவையில்லை.
ஜீவியம் சிறிதளவு பரிணாமம் பெற்றால் உயர் நிலையை அடைகிறது.
அந்நிலையை அடைவதால் மட்டுமே அது செயலினுள் ஆழ்ந்து மறைந்துள்ள இறை சக்தியைக் கண்டு கொள்ள முடியும்.
இந்தப் பரிணாமத்தால் எழும் ஜீவியத்தின் இடையீடு ஒரு கடினமானதல்ல.
அதன் வெளிப்பாட்டில் அதன் அடிப்படைத் தன்மை மாறாமல் இருக்கும்.
ஒரு சர்வ வல்லமை படைத்த மனம் தான் உருவாக்கிய சிருஷ்டியில் தன் சக்தியைச் செலுத்துவது மிக எளிதானது.
இங்கு ஒரு பிரச்சனை இன்னும் உள்ளது.
அது சிருஷ்டியின் தன்னிச்சையாக செயல்படும் தன்மை.
அது தன் குறிக்கோளைப் புரிந்து கொள்ள முடியாத நிலை.
அது அதன் சட்டத்தின் ஒழுங்கற்ற அர்த்தமற்ற நிலை.

It is a law of unnecessary ignorance, strife and suffering.

It is its ending without a denouement or issue.
Is it a play?
But why this stamp of so many undivine elements and characters in the play?
Why is it with One whose nature must be supposed to be divine?
A suggestion is what we see worked out in the world is the thoughts of God.
One retort can be made that God could well have had better thoughts.
The best thought would have been to refrain from the creation.
It is the creation of an unhappy and unintelligible universe.

All theistic explanations, starting from an extra-cosmic Deity stumble over this difficulty.

But they can only evade it.

This difficulty would disappear only if the Creator were immanent in the creation.
He himself would be both the player and the play.
He would be an Infinite casting infinite possibilities.
They would be cast into the form of an evolutionary cosmic order.

Contd...



அது தேவையற்ற அறியாமை, பிணக்கு மற்றும் துன்பத்தின் சட்டம்.
முக்கிய பிரச்சனையைத் தீர்க்காமல் முடிவடையும் நிலை அது.
இது ஒரு லீலையா?
அப்படியானால் இந்த லீலையில் இறைவனுக்கு எதிரான பலதரப்பட்ட பொருட்களும் பாத்திரங்களும் ஏன் உள்ளன?
தெய்வீகத்தைத் தன் இயல்பாகக் கொண்ட ஒன்றுடன் இவை ஏன் உடனுறைகின்றன?
நாம் உலகில் காணும் செயல்கள் அனைத்தும் கடவுளின் எண்ணங்கள் என்று நாம் கருதலாம்.
அப்படியானால் கடவுளின் எண்ணங்கள் இதைவிட சிறப்பானதாக இருந்திருக்கலாம் என்ற கேள்வி நமக்கு எழுகிறது.
சிருஷ்டியைத் தவிர்ப்பது அவருடைய மிகச் சிறந்த எண்ணமாக இருந்திருக்கலாம் என்றும் தோன்றலாம்.
அது ஒரு இன்பமற்ற மற்றும் அறிவிற்கப்பாற்ப்பட்ட பிரபஞ்சத்தின் சிருஷ்டி.
கடவுள் சிருஷ்டிக்கு அப்பாற்பட்டவர் என்ற நியதியில் தொடங்கும் அனைத்து ஆத்திக வாதமும் இப்பிரச்சனையை எதிர்கொள்கின்றன.
ஆனால் அவர்கள் இதற்குப் பதிலளிக்க முடியாமல் தட்டிக் கழிக்க மட்டுமே முடியும்.
சிருஷ்டிகர்த்தா சிருஷ்டியில் ஆழ்ந்து நிறைந்துள்ளார் என்று ஏற்பதால் மட்டுமே இப்பிரச்சனை மறையும்.
அவரே ஆடுபவர், ஆட்டம் இரண்டுமாக உள்ளார்.
அவர் அனந்தமான சாத்தியங்களாக உருப்பெறும் ஒரு அனந்தம்.
அந்த சாத்தியங்கள் பிரபஞ்ச பரிணாம அமைப்பின் ரூபங்களாக உருப்பெறுகின்றன.

தொடரும்...

இம்மாதச் செய்தி

**செயலும் சிந்தனையும் எதிராக இருப்பது மனித வாழ்வு. அவை இணைந்து இருப்பது ஸ்ரீ அரவிந்தம்.**





**Page 187: Left quivering the subtle body's frame.**

***சூட்சும உடலின் சடலம் ஆடி அதிர்ந்து***

✡ அவர் கோபம் தாவிக்குதித்து மிருகமாகத் தாக்கியது

✡ ஆட்டங்கண்ட அரங்கில் குதிரைமேல் வந்து தாக்கி

✡ ஒருவர் வருத்தம் அடுத்தவர் நெஞ்சை ஆக்ரமிக்கும்

✡ மற்றவர் சந்தோஷம் நம் ரத்தத்தில் கொப்பளித்து

✡ நெஞ்சத்திற்கு நேரமில்லை, தூரமில்லை, எக்குரலும் கேட்கும்

✡ தூரத்து கடலலைகள் காதிலும் நெஞ்சிலும் ஒலிக்கும்

✡ இதயம் இணைந்து துடிக்கும் இசை எழுகிறது

✡ காத தூரத்து ஜீவன் ஸ்பரிசமறிந்து

✡ ஜீவியம் ஜீவியத்துடன் கலந்து உறவாடி

✡ உறவும் உரையும் ஜீவனில் ஒருமையைக் காண இயலவில்லை

✡ ஆத்மா ஆத்மாவிலிருந்து பிரிந்தே நின்றது

✡ அகம் ஆன்மிக மௌனச் சுவரால் சூழப்பட்டது

✡ ஆயுதமான வலிமை பாதுகாத்துக் காப்பாற்றியது

✡ ஜீவன் தனித்து ஒதுங்கி மறைந்திருந்தது

✡ பிரம்மத்துள் புகுந்து தனித்து வாழ இயலும்

✡ இணைவதின் அமைதி இன்னும் ஐக்கியம் தரவில்லை

✡ அரைகுறை ஞானம், அரைகுறைச் செயல், அனைத்திலும் குறை

✡ ஜடம் இருளான அற்புதத்தைக் கடந்து விட்டோம்

✡ பரமாத்மா அற்புதம் இனியும்

✡ தெரியவில்லை, தெரிய முடியவில்லை, உணர முடியவில்லை, தன்னுள் மறைந்துள்ளது

✡ அதனின்று எழுந்த அனைத்தையும் குனிந்து பார்த்தது

✡ ரூபமற்ற அனந்தனின் ரூபங்களாய் அவை வந்தன

✡ பெயரற்ற அனந்தத்தில் வாழும் பெயருடைய பொருட்கள்

✡ ஆரம்பமும், முடிவும் அங்குப் பார்வையறியாத சூட்சுமம்

✡ விளக்கத்தராத வேகமாக செயல் இடைப்பட்டது

✡ சொல்லற்ற சத்தியத்தை விளிக்கும் சொற்பெரும் கூட்டம்

✡ முடிவற்ற தொகையை நாடும் முடிவில்லாத எண்கள்

✡ எவரும் உலகையறியார், தன்னையுமறியார்

✡ சத்தியம் அங்குக் கோயிலில் கொலு வீற்றிருந்தது

✡ மனம் எதை எடுத்து எப்படிச் செப்பனிடும் என அறிந்து

✡ இரகஸ்ய சத்திய ஜீவியத்தின் பெரும் சேமிப்பிலிருந்து

✡ அடியில் ஆழ்ந்த இருளும், மேலே சூன்யமான பிரகாசமும்

✡ மலையேறும் கட்டத்தின் நிலையற்ற வாழ்வு

✡ புதிர் மூலம் அவர் விளக்கிய பெரும் புதிரின் மூலம்

✡ விடுதலையான புதிருக்கு விபரமற்ற பதில்

**ஜீவிய மணி**

*மணிக்கொருமுறை சமர்ப்பணம் நிலையாக ஜீவியத்தை உயர்த்தவல்லது.*



## யோக வாழ்க்கை விளக்கம்

### 22/32. எண்ணம் சூட்சும லோகத்தில்தான் சமர்ப்பணமாகும்

- இந்தச் சமர்ப்பணம் வாழ்வுக்குரியதல்ல, யோகத்திற்குரியது.
- அன்பர்கள் இதுபோன்ற கருத்துகளை அறிவது நல்லது. ஹட யோகி இதயத்தை நிறுத்துகிறார் என்பது நாம் கேள்விப்படலாம். அது நம் போன்றவர் செய்யக்கூடிய காரியமில்லை.
- சிறப்பாகப் பாடுவதைக் கேட்கலாம், விளையாடுவதைப் பார்க்கலாம். நமக்குரியதல்ல அவை.
- *ஒருவர் முயன்று பெற விரும்பினால் முடியாததில்லை.*
- டார்சியை எலிசபெத் மறுத்தபின், அவன் கடிதம் எழுதினான். அதைப் படித்து விக்காம் தறுதலை என அறிந்து அவனை மறந்தாள்.
  ஆனால் டார்சி அவளுக்கு உடனேயோ, கொஞ்ச நாட்கள் கழித்தோ நினைவு வரவில்லை. பெரிய அந்தஸ்துள்ளவன். திருமணம் செய்துகொள்ள விரும்பினான். ஆச்சரியம். கடுமையாக எதிர்த்து மறுத்து விட்டாள். *அதன் பிறகு டார்சிக்கு அவள் வாழ்வில் இடமில்லை.*
- டார்சி நிலையும் அதுவே. இனி தன்னை அவள் மணப்பாள் என அவன் நினைக்கவில்லை. ஆனால் அவள் கூறியதின் உண்மையை ஏற்றான்.
  அது விஷயத்தில் மாற வேண்டிய அவசியத்தை உணர்ந்தான், மாறினான்.

  *அவள் தன்னை ஏற்பாளா என்ற கேள்வி அவனுக்கு எழவில்லை.*

  — அவன் மனம் மாறியது.

  — சந்தர்ப்பம் மாறியது.

— அவள் மன நிலையும் மாறியது.

— *அவர்கள் சந்தித்தார்கள். அது புது உலகம்.*

- டார்சி திருமணம் கேட்டது உலக வாழ்வில்.
- அவன் மனம் மாறியது சூட்சும உலகில்.
- அவன் மனம் மாறியது "சூட்சும உலகில் எண்ணம் சமர்ப்பணமானது போல்."
- கோபப்பட வேண்டாம் என்ற எண்ணம் சமர்ப்பணமாக வேண்டும் எனில் முதலில் கோபம் தணிய வேண்டும். கோபம் வேண்டாம் என்ற எண்ணம் தெளிவாக எழ வேண்டும். மனம் அந்த எண்ணத்தைச் சமர்ப்பணம் செய்வது உண்மையாக இருக்க வேண்டும். அப்படியிருந்தால், எண்ணம் அமைதியாகி, அடங்கும். அடங்கிய பிறகு சமர்ப்பணம் செய்ய முயன்றால், எண்ணம் சூட்சும உலகை அடைந்து மறையும்.

  நடைமுறையில் கோபம் அடங்காது. சில சமயம் அதிகமாகும்.

  சமர்ப்பணம் அதேநிலையில் தடைபடும்.

  *தொடர்ந்து வருஷக்கணக்காக முயல்பவருக்குப் பலன் உண்டு.*
- சூட்சும உலகில் மட்டும் நடப்பதை நாம் நம் உலகில் நடத்திக் கொள்ள முயல்வது நம் இயல்பு.
- *தலைப்பில் உள்ள செய்தி கூறுவது :*
  நெடுநாளில் நடக்க வேண்டியது சமர்ப்பணத்தால் உடனே நடக்கும்.
- எந்தப் பெரிய காரியமும் நெடுநாளாகத் தயாராகி மேலே வரும்.
- ஒரு ஊர் முனிசிபல் சேர்மனாக அவர் பொது வாழ்வில் பல நாட்களிருந்து மக்கள் மனதில் அவருக்கு இடம் ஏற்பட்டிருக்க வேண்டும்.



- வெளியூர் பிரமுகர் உள்ளூருக்கு வந்தால், அவர் நேரடியாக சேர்மேனாகலாம்.
- உள்ளூர் மனிதன், பொது வாழ்விலில்லாதவர் சமர்ப்பணத்தால் இன்று சேர்மேனாகலாம் என்பது இச்செய்தி கூறுவது.

  சேர்மேனாவது இலட்சியமில்லை.

  *எண்ணம் சமர்ப்பணமானால் சேர்மேனாக முடியும் என்று அறிவது நோக்கம்.*
- சமர்ப்பணம் என்றால் செய்யும் வேலை முழுவதும் அன்னைக்கு அர்ப்பணமாக வேண்டும்.
- ஒரு அன்பருக்குச் சமர்ப்பண வாழ்வு முறையானால், அவர் அவ்வூரில் எளிய குடிமகனானால் அவருடைய சமர்ப்பணம் இவ்விஷயத்தில் பலிக்கும் என்பது தத்துவம்.

  *அந்த எண்ணம் நம் மனத்தில், ஜட மனத்தில் சமர்ப்பணமாகாது.*

  எண்ணம் சூட்சுமம் போனால் அங்கு சமர்ப்பணமாகும். அப்படிச் சமர்ப்பணமான பின் அவர் சேர்மேனாவார்.
- *சமர்ப்பணத்தின் திறனை, எண்ணம் சூட்சுமமானபின் அதன் திறனை அறியும் வழி இது.*
- சூட்சுமத்துள் நுழைவது எளிதல்ல. அது யோகநிலை, சித்தியில்லாவிட்டாலும் யோகத்திற்குரிய நிலை.
- சமர்ப்பணமே வாழ்க்கையான அன்பர் சமர்ப்பணத்தின் எல்லா நிலைகளையும் அறியும் பொழுது செய்யக்கூடியது மேற்சொல்லியது.

**எண்ணம் சூட்சும லோகத்தில்தான் சமர்ப்பணமாகும்.**

- எண்ணம் மனதில் எழுகிறது. பேச்சு வாய்க்குரியது. எண்ணம், சூட்சுமம். பேச்சு, ஜடம்.
- மனம் பேசும், அதற்கு முழு சூட்சுமமில்லை, அது ஜடம். ஆனால் சூட்சுமத் தொடர்புள்ளது.

- *பேப்பரில் வரும் செய்தி நடந்ததைக் கூறுவது.* அதனால் நடக்கப் போவதைக் கூற முடியாது. நடந்ததை மாற்ற முடியாது. பேச்சு, பேப்பர் நியூஸ் போல. மனம் உச்சரிக்காத எண்ணம் சூட்சுமமானது. நடப்பதை நிர்ணயிக்கும், நடந்ததை மாற்றும்.
- திருமணமானபின் கணவன் பொறுப்பற்றவன், சொல்லைக் காப்பாற்றாதவன் எனில் இனி செய்ய என்ன இருக்கிறது?
- திருமணத்திற்கு முன்பே இது தெரியும். ஆனால் அதை அலட்சியம் செய்தோம் எனவும் தெரியும்.
- *தெரிந்து அலட்சியம் செய்த மனநிலை நம்முடையது.* அது இன்றும் நம்முள் உள்ளது. நாம் மாற விரும்பினால், அது மாறும். அது விஷயத்தை மாற்றும். அது சூட்சும லோகச் செயல்.
- நம் முடிவை மேல்மனத்தில் எடுத்தால், அது பலன் தராது.
- நம் மனம் சூட்சும லோகம் போய், திருமணத்திற்கு முன் நாமெடுத்த முடிவை நினைவு கூர்ந்தால் அது பசுமையாக மனதில் எழும். அதை மாற்ற இன்று மனம் வராது. அந்த பொறுப்பற்ற நிலை, வார்த்தையைக் காப்பாற்றாத நிலையே நம் மாறுதலுக்கு உதவும். அதனால் அது நமக்குத் தேவை. நம் மனம் இன்று மாறினால் மாற ஆசைப்பட்டால், மாறக்கூடாது என ஆழத்தில் கூறாவிட்டால், மனம் ஜடத்தை விட்டுச் சூட்சுமமாகும், மாறும். நாம் மாறாமல் எதிரி மாற நினைப்பது சுபாவம். மாற முன்வருவது திருவுருமாற்றம், மாற்றம் சூட்சுமத்தில் எழும். ஜடமான சொல் நீடிக்காது. ஜடத்தில் சொல் சமர்ப்பணமாகாது. அது பெட்ரோல் இல்லாத கார்.
- பகவான் யோகம் மேல்மனத்திலிருந்து உள்ளே சூட்சும லோகம் போய் செய்ய வேண்டியது.
- சமர்ப்பணத்தை நெடுநாள் தீவிரமாகச் செய்பவர்கள் இந்த வித்தியாசத்தை - ஜடமான மேல்மனச்சொல்லுக்கும்



சூட்சுமமான உள்மனச் சொல்லுக்கும் உள்ள வித்தியாசத்தை - அறிவார்.

சொல் மேல்மனத்தில் சமர்ப்பணமாகாது.
சூட்சும உள்மனத்தில் சமர்ப்பணமாகும்.

- *சமர்ப்பணம் செய்ய முடியவில்லை என நாம் கைவிட்ட நேரம் சொல் மேல்மனத்திலிருந்து சூட்சும உள்மனம் போவதைக் காணலாம்.*
- சமர்ப்பணம் நினைவு வராதவர் **Mother** என்பார்கள்.
- அதற்குச் சமர்ப்பணத்தின் ஒரு பகுதியான பலனிருக்கும்.
- **Mother** நினைவு வராதவருக்கு மனைவி நினைவு வரும்.
- மனைவி 'அது வேண்டாம்' என்பவராக இருந்தால் சொல் பலிக்கும் திறனை இழக்கும்.
- மனைவி நினைவு வராதவருக்கு "நான்" நினைவு வரும்.
- "நான்" பேசும்: **Mother** சமர்ப்பணம் எல்லாம் தேவையில்லை எனக் கூறும்.
- 650 சம்பாதிப்பவர் 1000 நினைத்தார், 2000 வந்து 1300 ஆகி டாக்டர் அதை ரத்து செய்தார். வந்த வேலை போய் விட்டது. 8 ஆண்டுகளாக அதைக் கேட்கத் தோன்றவில்லை. இன்றும் கேட்டால் வழி பிறக்கும். இனி நடக்காது என்று நம்புபவர் அன்னைக்குச் சக்தியில்லை எனக் கூறுபவர். அல்லது அதைப் பெறும் திறன் எனக்கில்லை என்பவர். திறனிருக்கிறது, நான் இதுவரை அறியவில்லை என்பது விழிப்பு. விழிப்புக்குப் பலன் உண்டு.
- உலகம் முன்னேறும்பொழுது பல நாடுகள் பின்-தங்குகின்றன. பின்தங்கிய நாடு அமெரிக்கா போல் முன்-வந்தால் உலகை ஆளும். அவ்வுண்மையை உலகம் கண்டும் ஏற்காது. அதுவே முழு உண்மையில்லை. இந்தியாவும் அதன்பின் பாரசீகம், கிரீஸ், ரோம், பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்காவும் வரிசைக்கிரமமாக முன்னெழுந்து வந்தனர்.

கிரீஸ் அறிவையும், பாரசீகம் பண்பையும், ரோம் சட்டத்தையும், பிரான்ஸ் அறிவின் கூர்மையையும், இங்கிலாந்து சாம்ராஜ்ய பண்பையும், அமெரிக்கா வர்த்தகச் செல்வத்தையும் முன்வைத்தது. எதுவும் ஆன்மிக அடிப்படையில் செயல்படவில்லை. இந்தியாவுக்கு ஆன்மிகம் உண்டு. கிரீஸ் முதல் இங்கிலாந்து வரை ஒரு காலம் செல்வாக்கு பெற்று இழந்தன. ஏனெனில் அவை மேலெழுந்தவாரியான cultures பண்புகள்.

- ஆன்மிகம் தலையெடுத்து பண்பு, அறிவு, சட்டம், இராஜ்ஜியம், சாம்ராஜ்ஜியம், செல்வம் மூலம் வெளிப்பட்டால் எதுவும் தன் ஆட்சியை இழக்காது. எல்லாம் அவரவர் நிலையில் முன்னுக்கு வருவார்கள். *முன்னுக்கு வருதல் எனில் தன் திறமையை ஆழப்படுத்திக் கொள்ளுதல். ஆன்மிகம் அதிக ஆழத்தில் உள்ளது.*
- எல்லா நாடுகளும் ஒரேசமயத்தில் முன்னுக்கு வர உதவுவது சத்திய ஜீவியம்.

### ஜீவிய மணி

*நாட்டு நிலை நாளுக்கு நாள் வளர்ந்து பெருகுகிறது, வளம் வளர்கிறது. ஆர்வமுள்ள இளைஞர்களை ஆதரிக்கிறது. நேர்மையான உழைப்பாளி அரிது. சென்னையில் மாதம் ரூபாய் 96,000 பெறும் உத்தியோகஸ்தர் நடத்திய கருத்தரங்குக்குக் கேரளாவிலிருந்து வந்தவர் தான் கண்டதை தன் அதிகாரியிடம் கூறினார். அவர் பம்பாயில் கருத்தரங்கில் கலந்து கொண்ட பொழுது டைரக்டரிடம் சென்னை செய்தியைக் கூறினார். உடனே அவர் சென்னைக்குப் போன் செய்து அவருக்கு 12 இலட்சம் மாத சம்பளம் தருவதாகக் கூறினார். நாட்டில் திறமை குறைவு, நேர்மையில்லை எனலாம். நேர்மையான திறமை முழு முயற்சியுடன் உழைக்க முன்வந்தால் Sky is the limit வானத்தையும் எட்டலாம் என்பது பரவி வளரும் தொழில் மார்க்கெட். கங்கைக் கரையிலுள்ளவர் தண்ணீர்ப் பஞ்சமென்பது சரியாகாது.*



## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### 127. செய்யும் வேலையில் சிறப்பு பொதுவாழ்வை நம்மை நோக்கி நகர்த்துவது

- இதன் தத்துவம்: அணுவின் சிறப்பு அனந்தத்தின் முழுமையைத் தட்டி எழுப்புவது.
- அனைத்தும் இணைந்த ஒருமையுடையதானால் (Integration) ஒன்றின் சிறப்பு அனைத்தையும் நகர்த்தும்.
- *ஒரு சொல்லின் உச்சஸ்தாயி அனைத்து சபையும் அதிருமாறு செய்யவல்லது.*
- ஒரு கிராமத்தில் பாங்க் கொடுத்த பணம் முழுவதும் வசூல் செய்யாமல் தானே வசூலானதால் அது இந்தியா முழுவதும் விவசாயக் கடன் பரவும் வித்தாயிற்று.
- ஒரு வகுப்பில் மாணவன் உயர்ந்த ஆங்கிலம் எழுதியதால், *ஆங்கில நர்சரி பள்ளிகள் எங்கும் எழுந்ததன.*
- T. V.-யில் முள் சென்னையைத் தொட்டால் சென்னை ஒலிபரப்பு முழுவதும் கேட்கும்.
- *சர்ச்சிலின் வீரம் துள்ளி எழுந்ததால் பிரிட்டிஷ் மக்கள் முழுத்தியாகம் செய்ய முன்வந்தனர்.*
- பிரம்மம் மனத்தையும் ஆத்மாவையும் கடந்தது. மனிதன் பிரம்மத்தை க்ஷணம் ஸ்பரிசித்தாலும் பிரம்மம் உலகம் முழுவதும் அசைந்து செயல்படுவது சிருஷ்டி - பரிணாமமாகும்.
- பகவான் ஸ்ரீ அரவிந்தர் ஜாதகம் சற்று பிழையுடன் ஜோஸ்யரிடம் கொடுக்கப்பட்டது. பின்னர் பிழையைத் திருத்திய பொழுது, ஜோஸ்யர் “*இரும்பு பொன்னாயிற்று*” என்றார்.

- முதலில் கொடுத்த நேரம் சற்று பிழையானது. எளிய மனிதன் வாழ்வைக் குறித்தது.
- பிறந்த நேரம் பிழையின்றி சரியான பொழுது ஜாதகம் “பரம்பொருளே புவியில் பிறந்து அந்நிய மொழியில்” உலகின் எதிர்காலத்தைக் கூறும் நூல் எழுதும் ஜாதகமாக மாறியது.
- பகவான் உயிர் மூச்சு சுதந்திரம். சுதந்திரத்திற்காக யோகத்தை மேற்கொண்டார். புதுமதம் ஸ்தாபனம் செய்யும் நோக்கம் அவருக்கில்லை. *அவர் ஸ்தாபிக்கப்போவது புதுமதமில்லை.* புது ஆன்மிகம் - ஒரு மனிதனுடைய விடுதலை உலகத்தின் திருவுருமாற்றமாக பேரின்பத்தை, யோகம் செய்தவர் செய்யாதவர் அனைவருக்கும் தருவது - *செய்தார் - மரித்தது* ‘*நிலை இல்.*’
- பூரண யோகத்தில் வேலையின் சிறப்பைச் செம்மையாகக் கூறலாம்.
  - — செய்த வேலை பூரணப்பலன் தரும்.
  - — செய்யாத வேலை பெரும்பலன் அனைவருக்கும் தரும்.
  - — *பூரண யோகம் வேலை, நினைவைக் கடந்த பூரணமுள்ளது.*
  - — வம்பனும், வழக்கனும் மருமகனாக வந்து உயிரை எடுக்கும் பொழுது பூரண யோகம் உண்மையைக் கண்டு வம்பன் சீரிய சாதகன் எனக் காட்டும். வம்பும் வழக்கும் உள்ளது நம் மனத்தில், அவன் செயலிலில்லை என அறிவுறுத்தும்.
  - — க்ஷணத்தில் கதவு திறப்பது மனம் சத்தியத்தை நாடுவது.
  - — துள்ளிக் குதிக்கும் தலைவர் சோம்பி மறையும் கோழிக்குஞ்சாவார்.
  - — உலகை ஏமாற்றும் பெரும் பொய், உழைப்பாக வெளிப்படும் மெய்யாகும்.



- — அடிமட்டம் அசைந்தாடி அவலப்படுத்துவது உயர்மட்டம் கொண்டாடுவதாகும்.
- — “எழுதியது பரம்பொருள்” என நாடி ஜோஸ்யம் கூறும்.
- — இன்றைய காலம் மனித ஆயுளை நீட்டிக்கிறது. அன்னை நீடிப்பதை நிரந்தரமாக்குகிறார். “லிமிட்”டைத் தேடுபவர் கர்மத்தை வலியுறுத்துகிறார்.
- — கட்டித் தங்கமும் மூடிய கண்கட்டுத் தெரியாது. பகவான் தருவது தங்கத்தால் கட்டிய உள்ளத்திருக்கோயில்.

## ஜீவிய மணி

*திறமையும் நாணயமுமிருந்தால் மனிதனை உலகம் தெய்வமாகக் கருதும். இன்ஜினீயரிங் கல்லூரியில் ஒரு ஆசிரியர் தன் மைத்துனன் படிப்பதால் அவனைப் பார்க்கச் சென்றார். அந்த நாளில் தமிழ்நாட்டில் மூன்று இன்ஜினீயரிங் கல்லூரிகளே இருந்தன. இவர் பள்ளி ஆசிரியர். சென்னையில் மைத்துனனைக் காணச் சென்றார். அங்கு இவரிடம் படித்த மாணவர் பலரிருந்தனர். செய்தி பரவி அனைவரும் வந்து அவரைக் கண்டனர். அவர்களுள் ஒரு மாணவன் பள்ளியில் முதல் மாணவனாக வந்தவன். பிறகு லயோலா காலேஜில் படித்தவன். அவன், “சார், உங்களிடம் படித்த பிறகு நான் பல பெரிய கணித ஆசிரியர்கள் வகுப்பிலிருந்திருக்கிறேன். அவர்கள் எல்லாம் கல்லூரியில் பேர் போனவர்கள். ஆனால் பள்ளியில் நீங்கள் போர்டில் கணக்குப் போட்டது, எங்களுக்குப் பாடம் நடத்தியது ஒரு பெரிய மறக்க முடியாத அனுபவம். அதுபோல் இதுவரை இந்த 5 வருஷமாக எனக்கு ஓர் அனுபவம் கிடைக்கவில்லை’’ என்றான். கல்வி சரஸ்வதி, வெள்ளைத் தாமரை பூவிலிருப்பவள். அவளைத் துதிப்பது அகில உலக பிரம்மத்தை மனதில் ஏற்று மகிழ்வது. பிரம்மம் தெளிந்தால் உலகம் தெரியும் என்பது உபநிஷதம்.*

**எந்த ஒரு கலையையும் அல்லது இடத்தையும் அல்லது மனிதரையும் பண்போடு பக்தியுடன் பாராட்டினால், உலகத்தின் பாராட்டுக்கு உரியவராவோம்.**

## அஜெண்டா

**உடல் தன்னைத்தானே குணப்படுத்திக் கொள்ளும். தற்சமயம் உடல் தாக்குதலினின்று தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும்.**

- ஒரு குடும்ப வருமானம் அதனால் சம்பாதிக்கப்பட வேண்டும்.
- வழக்கு, கோர்ட், வருமானம் தராது. ஆபத்தை, அநியாயத்தை விலக்கும். நேரம் சரியில்லாவிட்டால் கோர்ட் *அநியாயம் வழங்கும்*.
- வருமானம் நாமே சம்பாதிப்பது போல் உடல் நலம் உடலே பேணுவது.
- எந்த வைத்தியரும், வைத்தியமும் உடலுக்கு நலன் தருவதில்லை. உடல் நோய் வாய்ப்பட்டிருப்பதால் மருந்து நோயைக் குணப்படுத்தும்பொழுது உடல் தான் இழந்த நலனைப் பெறும்.
- நடைமுறையில் உடல் நலக்குறைவு இருமலானால், வைத்தியம் நம்மை இருமலைக் கவனிக்கச் செய்யும். இருமல் வலுப்பட்டு அதிகமாகும். நோய் வந்தபிறகு அதை அது வளராமல் குணப்படுத்துவது கடினம்.
- மேதை ரஸ்ஸல் "கல்வி" என்றெழுதிய நூல் பிரசித்தமானது. சிறு குழந்தை காலையில் மலம் கழிப்பதை நாம் கவனிப்பதால் அது நாம் எதிர்பார்ப்பதற்கு எதிராக செயல்படுகிறது. மலச்சிக்கல் வரும் என்கிறார்.
- உடல் அற்புதமான கருவி. அதை முறையாகக் கவனிக்கப் பொறுமை வேண்டும். அறிவு வேண்டும். அதற்குரிய உபாயம் தேவை. இருமினால், மனம் இருமலின் உண்மையை அறிந்து - கவனித்தால் வளரும் என அறிந்து - அதை 'மறப்பதற்காக' வேறு வேலையில் ஈடுபட்டால், மறப்பது அவசியம் என அறிந்தால் ஓரிரு நாள் கழித்து இருந்த இடம் தெரியாமல் போகும்.



- தேள், பூரான், பாம்பு வந்தால் அடித்தால் அதிகமாக வரும் என்பதும் இக்கருத்தே.
- வேலை நிறுத்தம் எக்காரணமுமில்லாமல் 1960-இல் பரவியது. சிலர் பீதியடைந்து எதிர்த்தனர். அது வளர்ந்தது. ஒருவர் அன்று விடுமுறை தந்தார். அது வளரவில்லை.
- ஒருமுறை நோயை இது போல் குணப்படுத்துவது அரிது. இக்கருத்தை அறிந்து மனம் இந்த "நோக்கத்"தை ஏற்றால் அடுத்த ஆண்டுகளில் நோய் எழாததைக் காணலாம்.
- பிள்ளைகள் செல்லத்தால் கெட்டுப் போவதை பொறுமையுள்ள பெற்றோர் இது போல் தடுப்பார்கள். அதிக செல்லம் கொடுத்தாலோ, பதட்டப்பட்டாலோ குழந்தைகள் அதிகமாகக் கெட்டுப் போகும்.
- தினமும் வரும் பழக்காரியை 'எதிர்பார்த்தால்' நேரம் கழித்து வருவாள்.
- வேலையைச் செய்பவனுக்கு பிரமோஷன் எளிதிலும், பிரமோஷனை எதிர்பார்ப்பவனுக்குத் தாழ்ந்தும் வரும்.
- பகவானும் அன்னையும் தரிசனம் தரும் ஆண்டுகளில் ஒரு சாதகர் தரிசனத்திற்குப் போக அடுத்தவரை உடன் அழைக்கப் போனார். அவர் வீட்டினுள் நுழைந்ததை அறியாத அந்த சாதகர் கதவைப் பூட்டிக் கொண்டு தரிசனத்திற்குப் போய் விட்டார். உள்ளே இருந்தவருக்கு எதுவும் புரியவில்லை. அவர் வந்து திறக்கவுமில்லை. நேரமானால் தரிசனம் தவறும். தோட்டத்து மதில் மேல் ஏறி ஆசிரமம் வந்து தரிசன அறைக்குப் போனார். தரிசனம் முடிந்து அன்னை போய் விட்டார். பகவான் எழுந்திருக்க முயல்கிறார். இவரைப் பார்த்து விவரமறிந்து "அன்னையைக் கூப்பிடு" என்றார். இருவரும் இணைந்து தரிசனம் தந்தார்கள். *தரிசனம் ஒருவருக்குத் தனிப்பட்டது. இருவர் சேர நினைத்தால் நிலைமை மாறுகிறது*. தரிசனம் தரும் இருவரில் ஒருவரில்லை. கருணை பெருங்கருணையாகி இழந்ததை ரத்து செய்து மீண்டும் முழு தரிசனம் வழங்கினர்.

## வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

21. நாம் அடுத்தவர்களை உதவி கேட்கும்பொழுது நாம் கேட்கும் உதவி நியாயமானதாக இருக்க வேண்டும். யாரைக் கேட்கிறோமோ அவர்கள் நமக்கு நன்றாகத் தெரிந்தவர்களாக இருந்து அவர்கட்கு உதவும் மனப்பான்மை உண்டு என்பது தெரிந்திருந்தால் கேட்கின்ற உதவி கிடைக்கும்.

இந்தக் கட்டத்தில் எழும் கேள்வி இரண்டு.

(1) கேட்டால் கிடைக்குமா?

(2) கேட்கலாமா?

அன்பர் நிலை உலகத்து மக்கள் நிலையிலிருந்து மாறியது. இக்கருத்து, கிடைக்குமா கிடைக்காதா என்பது உலகத்திற்குரியது. அன்பர் நிலை வேறு. அன்பருக்கு உதவி தேவைப்படும்முன் சூழலில் அவருக்கு உதவும் நோக்கம், அவசியம் பல பேருக்கு எழும். அருள் பத்திரிக்கை ஆரம்பித்தவுடன் ஒரு அன்பர் அதற்குரிய பேப்பர் கொடுக்க முன்வந்தார். மற்றொருவர் ஸ்டாம்பு செலவை ஏற்றார். அடுத்தவர் கவர் வாங்கிக் கொடுக்க முன்வந்தார். இதுவே அன்பர் நிலை. எந்த உதவி அவருக்கு வேண்டுமென்றாலும், சூழல் முன்கூட்டித் தயாராக இருக்கும். கனிந்த சூழலைச் செயல்படுத்த மற்றவர் முன்வருவார்கள். எந்த இடத்துப் பெண்ணை நாம் கேட்க முடியாதோ, கேட்க நினைக்க முடியாதோ, அவர்கள் நாம் கேட்க காத்திருக்கிறார்கள் எனச் செய்தி வரும். *கலெக்டர் ஊரில் யார் வீட்டிற்கும் வர மாட்டார். மந்திரி வருவார். கலெக்டர் வரும் பழக்கமில்லை.* கவர்னர் வருவது என்பதேயில்லை. “நான் உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். சந்திக்க விருப்பப்பட்டேன். நானே ஒரு நாள் உங்களிடத்திற்கு வருகிறேன்” என்று கவர்னர் அன்பரிடம் கூறியதும் உண்டு.

**Part C** ஸ்டேட் கவர்னர் வேலை அரசியல் வானத்தில் அஸ்தமிக்கும் சூரியனுக்குரியது. அது போல் பேசிய கவர்னர், அன்பர் இடத்திற்கு வந்தவர் **Part A** ஸ்டேட் கவர்னராகி, உப ஜனாதிபதியாகி, 6 மாதம் தற்காலிக ஜனாதிபதியாகவுமானார். அன்பர் நிலை உதவி பெறும் நிலையில்லை. உதவியை அனைவருக்கும் அபரிமிதமாகத் தரும் நிலை. அன்பர் ஒரு கடைக்குப் போனால் உடன் 10 பேர் வாடிக்கைக்காரர்கள் வருவார். காலியான பஸ்ஸில் அன்பர் ஏறினால் சீக்கிரம் பஸ் நிரம்பி விடும். மனைகள் விற்காத இடத்தில் அன்பர் மனை வாங்கினால் அத்தனையும் விற்று விடும்.

— அன்பர் ஒருவரைக் கேட்ட உதவியைச் செய்யும் தகுதி ஒருவருக்கில்லை எனில், அன்பர் கேட்டதால் அவருக்கு அந்தத் தகுதி வரும்.

— ஒருவர் அன்பருக்கு உதவினால் அவருக்குப் பலரும் பல வகையிலும் உதவுவார்கள்.

— அன்பர் அனந்த மையம்.

— அன்பருக்கு உதவிய ஸ்தாபனம் சிறியதானால் அக்காரணத்தால் பெரியதாகி உள்ளூர் ஸ்தாபனம் மாவட்ட ஸ்தாபனமாகும்.

— சட்டம் அன்பருக்கு உதவினால் அந்தச் சட்டம் சிறக்கும்படி புதுச் சட்டங்கள் வரும்.

— அன்பருடன் ஒருவர் டாலர் அல்லது யூரோ வியாபாரம் செய்தால் அவற்றின் விலை ஏறும்.

— *அன்பருக்கு உதவி தேவைப்படும் நேரம் அவர் செய்ய வேண்டிய ஒரே காரியம் எவரையும் உதவி கேட்கக் கூடாது,* கேட்க நினைக்கக் கூடாது. நினைத்து நினைவை அழிப்பதைவிட நினைவே எழாமலிருக்கும் மனநிலை தேவை.

— உதவி தேவைப்படுவது உள்ள நிலையில் உள்ள செயல்களுக்காக. அதே நிலையில் உள்ளவரிடம் கேட்க வேண்டும் என்பது சட்டம். *அன்பர் நிலை அது இல்லை. எப்பொழுதுமில்லை. எந்த விஷயத்திலுமில்லை. உதவி செய்யும் நிலை அன்பர் நிலை.*

(தொடரும்)

# ஸ்ரீ அரவிந்தரின் ஆன்மிக சிந்தனைகள் - பாகம் 1

(சென்ற இதழின் தொடர்ச்சி)

மூலம்: ஸ்ரீ கர்மயோகி
விரிவாக்கம் மற்றும் சொற்பொழிவு: திரு. M. ஜகந்நாதன்
சொற்பொழிவு ஆற்றிய தேதி: 06.09.2015

3. *பெரு நூல்களின் சொல் பொய்ப்பதில்லை. அவற்றிற்கு விளக்கம் எழுதுவதில் இதயமும் அறிவும் தவறுகின்றன.*

*வேதம் வாழ்வின் சிறுமைகளைத் துறக்க வேண்டும் என்றது. உபநிஷதம் சர்வம் பிரம்மம் என்றது. கீதை சரணாகதியை எடுத்துக் கூறியது. ஏசு பாவத்தை மன்னிக்கச் சொன்னார். பகவான் வாழ்வனைத்தும் யோகம் என்றார்.* அறிவில்லாமல் தவறு செய்வது அனைவரும் செய்வது. அறிவைத் தவறு செய்யப் பயன்படுத்துபவன் அயோக்கியன். அறியாமையை அறிவாகக் கொண்டு செய்யும் தவற்றைத் தீவிரமாகச் செய்வது பரவலானது. உருவ வழிபாட்டை மறுத்த புத்தர் சிலையைப் பௌத்தர்கள் வழிபடுவது பௌத்த மதம். ஞானம் பெரியது. என்றாலும் சிறிய மனிதன் பெரிய ஞானத்தைப் பின்பற்றும் வகையில் தத்துவத்தை நடைமுறையாக மாற்றியமைப்பது ஒரு பெரிய ஆத்மா. அதிலும் தவறு எழுவதுண்டு. தவறு செய்தவன் மனம் மாறினால் அவனை மன்னிப்பது முறை எனில், அவன் மனம் மாறாவிட்டாலும், அவனை மன்னிக்க வேண்டும் என்ற நடைமுறை வந்து விட்டது. வாழ்வைத் துறக்கக் கூடாது, ஏற்க வேண்டும் எனில், *வாழ்வை அப்படியே ஏற்பது தத்துவம் என்பது நம்பிக்கையாகிறது*. அறிவை வற்புறுத்துவது இலட்சியம் என்றால் நக்கீரன் அகந்தையை வற்புறுத்துகிறான். வாழ்வின் மீதுள்ள பாசத்தை அறுக்க ‘பற்றறுத்தல்’ ஏற்பட்டால் வாழ்வைத் துறப்பது வழக்கமாகிறது. உடல் முக்கியமில்லை எனில் குளிக்காமல், உடலைக் கவனிக்காமல், தலையில் அழுக்கு சடையாக மாறுவது இலட்சியம் என்பது பெருமானுக்கே சடையன் என்ற பெயர் ஏற்பட்டது. எளிய மனிதனால் எளிய



இலட்சியத்தையும் ஏற்க முடியாது. அதனால் அவன் ஏற்க வேண்டியதைத் தான் ஏற்கும் வகையில் மாற்றிப் புரிந்து கொள்வது, மாற்றி அமைத்துக் கொள்வது அவன் சுபாவம். அமெரிக்கா போனபின் நம் நாட்டிலிருந்தவரை பின்பற்றாத சடங்குகளை அதிதீவிரமாகப் பின்பற்றுவதைக் காண்கிறோம். திருமணம் முக்கியமெனில் திருமணத்தை நடத்துபவர் மணமக்களைவிட தங்களைத் திருமணத்தில் முக்கியமாக்கி விழாவைக் கொண்டாடுவதும் உண்டு. சில திருமணங்களில் மணமக்களுடன் பிறந்தவர், “*அப்பாவும், அம்மாவும்தான் புதுத்தம்பதிகளாக இருக்கின்றனர்*” என்று கூறும்படி மணவிழா நடப்பதும் உண்டு. 4 வருஷம் (அல்லது) 6 வருஷம் படித்து அறிவு பெற்றதின் அடையாளமாக பட்டம் கொடுத்தால், படிப்புக்குள்ள முக்கியத்துவத்தைவிட பட்டத்திற்கு முக்கியத்துவம் வந்து விடுகிறது. சுலோவேனியா என்ற நாட்டில் ஒரு கம்பெனியுண்டு. அவர்கள் தொழில் புத்தகம் அச்சிடுவது. கிருஸ்துவர்கட்கு பைபிள், முஸ்லீம்கட்கு குரான், இந்தியர்கட்குக் கீதை, கம்யூனிஸ்ட்கட்கு மார்க்ஸ் எழுதிய **Capital** என்ற நூல் எனப் பலவகையானவர்கட்கு பலவகையான பெருநூல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அன்பர்கட்குச் சாவித்ரி, **The Life Divine** போல. இக்கம்பெனி இதுபோன்ற நூல்களைச் சிறப்பான ஆர்டர் பெற்று பெரிய சைஸ், தங்க எழுத்து என்ற விசேஷங்களால் தயாரிக்கிறது. ஒரு பிரதி $20,000 வரை விலையிருக்கும். சமீபத்தில் குரானை 10 அடி உயர பிரதியாக பல சிறப்பு அம்சங்களுடன் அச்சிட்டு ஒரே பிரதியை $200,000-க்கு விற்றார். மதக்கோட்பாட்டைவிட அதைக் கூறும் நூலுக்கு மரியாதை வருகிறது. அதில் என்ன கூறுகிறார்கள் என்பது பலருக்குத் தெரியாமலிருக்கலாம். இது நடைமுறை. அன்னை படமிருந்தால் வீடு அன்பர் வீடாகும் என்ற நம்பிக்கை நம்மிடம் உலவுவதைக் காணலாம். குடுமி, நாமம், பூணூல் மட்டுமே வைதீகம் என்ற நாளிருந்தது. இன்றும் அம்மன-நிலைக்குக் குறைவில்லை. பகவான் ஓரிடத்தில் சாதகர்கள் “குருவுக்கு லஞ்சம் கொடுப்பதற்கே விழைகிறார்கள். சாதனையை ஏற்கும் மனநிலையில்லை” என்று எழுதுகிறார்.

*இம்மனப்பான்மை நாடு முழுவதும் பரவி "மாவால் செய்வதைப் பூவால் செய்வது" என்ற பழமொழி எழுந்தது.* மனிதன் எப்படியெல்லாம் இலட்சியத்தை விட்டு அகலுகிறான் என்று உணர்ந்த நேரம் பகவான் "என்ன அவனுக்காகக் காத்திருக்கிறது என மனிதனுக்குப் புரிந்து விட்டால் அரைக்கணம் தாமதமில்லாமல் அவன் ஆண்டவனிடம் வருவான்" என்றார். *இலட்சியம் உயிருள்ளது.* கோயில் சிலைக்கு உயிர் உண்டு. *அம்பாள் பேசுவதும் உண்டு.* திரௌபதியின் குரல் மட்டும் கண்ணனுக்குக் கேட்கவில்லை. மெக்ஸிகோவில் குரல் எழுப்பிய பக்தர் குரலும் அன்னைக்குக் கேட்டது. வராந்தாவில் நின்று வாயைத் திறக்காமல் அன்னையை அழைத்தால், மன்மோகன் சிங் வந்ததும் நிகழ்ந்ததே.

(தொடரும்)

## ஸ்ரீ அரவிந்த சுடர்

கீதை சுபாவத்தை மாற்றுவது முடியாது, தவறு, ஆபத்து என எச்சரிக்கிறது. பகவான் கீதை சுபாவத்தைப் பற்றிக் கூறுவதையெல்லாம் ஏற்கிறார். ஆனால் அவர் யோகம் சுபாவத்தை அடியோடு மாற்றுவது. திருவுருமாற்றம் என அவர் கூறுவது. மனித சுபாவம் தெய்வ சுபாவமாவது யோகம். ஆனால் சுபாவத்தை எதிர்க்கக் கூடாது. சுபாவத்தை ஒட்டியே சுபாவத்தை மாற்ற வேண்டும் என்கிறார்.

நாட்டின் இலட்சியங்கள் ஒருவர் சுபாவத்திற்கு உகந்ததானால் அவர் நாட்டில் பெரிய மனிதராவார். பழக்கமும், நடத்தையும் அவசியமானாலும் சுபாவத்தைப் போல் அவற்றால் சாதிக்க முடியாது. பழக்கம் எளிதில் மாறும், நடத்தையை முயன்று மாற்றலாம், சுபாவம் மாற அனுமதிக்காது. Sincerity உண்மை என்பது சுபாவத்தின் குறையை மீறிச் செயல்படும். ஒரு நாட்டின் உயர்வு அதன் மக்களுக்கு அதனால் தரக்கூடிய சுபாவத்தால் நிர்ணயிக்கப்படும்.

**இந்தியா நமக்குக் கொடுத்த சுபாவம்**
**தெய்வ பக்தியுள்ள வாழ்வை வாழ வேண்டும் என்பது.**



# The Life Divine – Outline
# தமிழ்

கர்மயோகி

**BOOK I** (28 அத்தியாய சுருக்கம்)
(மேற்கூறிய சிறு குறிப்பான விளக்கத்தை மீண்டும் கூறுவது)

**I. இறைவன் தானே உலகமாகிய பொழுது மீண்டும் பரிணாமத்தால் தன்னை வந்து அடையும் மார்க்கங்களை விவரிக்கும் பகுதியிது.**

சத்து, சித்து, ஆனந்தம் என்ற சச்சிதானந்தம் எங்கும் நிறை பரம்பொருளான இறைவனாகும். ஆத்மா, மனம், உயிர், உடல் வாழ்வாகும். அதை தெய்வீக ஆத்மா, மனம், வாழ்வு, சைத்திய புருஷன், ஜடமான உடலெனலாம். *இறைவன் தன்னை உலகமாக்க மேற்கொண்ட உபாயம் தலைகீழ் மாறுதல்.* மீண்டும் தன்னையடைய பரிணாமத்தை இறைவன் மேற்கொண்டான். அதைச் செய்ய அவன் தேடிய மார்க்கம் கீழே போய் திரும்பி மேலெழுவது.

சிருஷ்டியின் இந்த விளக்கத்திற்கு முன்னுரையாகிய எட்டு (8) அத்தியாயங்கள் மனித ஆர்வம், அவன் எதிர்கொண்ட தடை, அவன் தடையை மீறும் வழி, மனிதனுடைய ஆன்மிகப் பரிணாமக் கடமை, அதைச் செய்ய அவனுக்குள்ள தகுதி, ரிஷிகள் தடம் மாறிய காரணம், அவர்கள் வந்த முடிவுகளைக் கூறுகின்றன.

**II. (28 அத்தியாயங்களையும் மரபுடன் ஒத்திட்டு எழுதியது கீழ்க்கண்டது)**

மரபு இறைவன் உலகைக் குயவன் சிருஷ்டிப்பது போல் சிருஷ்டித்தான் எனக் கூறுவதால் இறைவன் வேறு, அவன் படைத்த உலகம் வேறு என்ற பிரிவினை உண்டாகிறது. *மரபின் பிரச்சனைகள் அனைத்தும் பிரிவினையால் எழுபவை. அதன் அஸ்திவாரம் இக்கருத்து.*

இறைவன் பிரம்மம். இங்கு இறைவனாகவும், பிரம்மமாகவும், நாம் கொள்வது சத்து, சித்து, ஆனந்தம் அடங்கிய சச்சிதானந்தம்.

உலகம் என்பது ஆத்மா, மனம், உயிர், உடல். பகவான் இந்த ஆத்மாவை தெய்வீக ஆத்மா எனவும், மனம் உயிரைக் கடந்தவுடன் மனித ஆத்மாவாக எழும் சைத்திய புருஷனையும், உடலைப் பிரதிபலிக்கும் ஜடத்தையும் உலகம் என்கிறார்.

சிருஷ்டிக்கப்பட்ட உலகம் எட்டு தத்துவங்களில் முதல் நான்கு தத்துவங்களான சத்து, சித்து, ஆனந்தம், சத்திய ஜீவியம் அடுத்த நான்கு தத்துவங்களான மனம், உயிர், சைத்திய புருஷன், ஜடமாக மாற தலைகீழ் மாற்றத்தை நாடின என்கிறார். இந்த மாற்றம் சிருஷ்டியைப் பூர்த்தி செய்கிறது. உலகம் மீண்டும் இறைவனையடைவது பரிணாமம். ஏழு தத்துவங்கள் பரிணாமத்தால் செயல்படும் பொழுது ஒரு தத்துவமே ஒரு சமயத்தில் செயல்படும். அதைச் செய்ய கீழே போய் மேலே எழ வேண்டும் என்பது கடைசி அத்தியாயம்.

மரபு தவ முயற்சியை மேற்கொண்டபொழுது ஆன்மாவின் சிறப்பை அறிந்தது. உடல், உயிர், மனம், ஆன்மா ஆகிய நான்கு கரணங்களில் தலையாயது ஆன்மா எனவும், ஆன்மா வாழ்வில் மனத்தாலும், உயிராலும், உடலாலும் சிறைப்படுத்தப்பட்டது எனவும் ஆன்மாவைச் சிறை மீட்டு அதன் ஆதியான பிரம்மத்தில் சேர்க்க வேண்டும் எனவும் கொண்டு தவத்தை மோட்சம் பெற மேற்கொண்டது.

பகவான் ஸ்ரீ அரவிந்தர் உலகம், பிரபஞ்சம், சிருஷ்டி, அனைத்தும் ஆன்மாவாலானது. *ஆன்மா பரிணாமத்தால் உடல் உயிர், மனத்திலிருந்து வெளிவருகிறது என்கிறார்*. மேலும் மனிதனே வாழ்வில் முடிவானவனல்ல, மனிதனுக்கடுத்த சத்தியஜீவன் பிறப்பான் எனவும் கூறுகிறார். மோட்சம் இறைவனின் இலட்சியமில்லை. உலகமான ஆன்மா பரிணாமத்தால் மீண்டும் தன்னை வந்தடைவதே இலட்சியம். அது திருவுருமாற்றம் என்கிறார். திருவுருமாற்றம் எனில் ஜட இருளான தீமை நன்மையாக மாறும். வாழ்வு உயிரை கடுமைப்படுத்துவதை மாற்றி உயிரை இனிமையாக்கும். மனம் அறியாமை நீங்கி சத்திய ஜீவியமாகும். *முடிவில் பூலோகம் சுவர்க்கமாகும்*. முயற்சியை முடிவுவரை நிறுத்தாவிடில் இந்த இலட்சியத்தை எட்டலாம் என்பது முதல் அத்தியாயம்.



இறைவனையடைய முயலும் மனிதன் உலகில் காண்பது ஜடப் பொருட்கள். நாத்திகவாதி ஜடப்பொருளை மூலமாகவும், முடிவாகவும் காண்கிறான். வேதாந்தம் ஜடப்பொருளை ஜடமாகவே கருதுகிறது. பகவான் *ஜடம் பிரம்மம்* என்கிறார். அறிவு பிரம்மத்தை ஜடமாகக் காண்கிறது. மனிதன் தன்னை அறிவிலிருந்து ஜீவியத்திற்கு உயர்த்தினால், ஜீவியம் ஜடத்தை சக்தியாகக் காண்கிறது என்கிறார் பகவான். மேலும் ஜீவியம் ஆத்மாவைச் சக்தியாகக் கண்டு ஜடமும், ஆன்மாவும் சக்தியாக பிரபஞ்ச ஜீவியத்தில் இணைகின்றன என நாம் காணலாம் என்பது ஸ்ரீ அரவிந்தம். இது இரண்டாம் அத்தியாயம்.

*ஆத்மா பெரியது. மிகப் பெரியது. சலனமற்று, இரட்டையழிந்து ஒன்றாகி, பிரிவினையைக் கடந்து மௌனமான பிரம்மமாக, பிரம்ம வாயிலில் உள்ளதைச் சன்னியாசி தரிசிக்கின்றான்*. இந்த பிரம்மாண்டமான ஆத்மிக அனுபவம் அவனை உலகையும், உள்ளதையும், எதிரானதையும் மறக்கச் செய்கிறது. அதிலேயே லயித்து விடுகிறான். அவனுக்கு ஜடமோ, உலகமோ நினைவு வருவதில்லை. ஆத்மா எவ்வளவு பெரியதானாலும், பகுதியே, முழுமையில்லை என்பது ஸ்ரீ அரவிந்தம்.

ஜடமும், ஆத்மாவும் பிரபஞ்சத்தில் இணைந்ததைக் கண்ட மனிதன் மேலும் தன் யாத்திரையைத் தொடர்ந்தால் பிரம்ம ஜீவியத்தில் அவை - ஜடமும், ஆன்மாவும் - ஆன்மாவாக இணைவதைக் காணலாம். இந்நிலை எங்கும் நிறை பரம்பொருளுக்குரியது என்பது ஸ்ரீ அரவிந்தம். இதைக் கூறுவது *மூன்றாம் அத்தியாயம்*.

*நான்காம் அத்தியாயம்*:- மரபு நாம் தவம் செய்து பிரம்மத்தை-யடைய வேண்டும் எனப் பணிக்கிறது. எங்கும் நிறை பரம்பொருள் எல்லாமுமாக மாறியதால், *மனிதனும் பரம்பொருளே*. அவன் இறைவனிடமிருந்து பிரிந்த நிலையில் இல்லை. அவனே இறைவன் என்பதை அறிவதே அவன் யோகம்.

*ஐந்தாம் அத்தியாயம் மனிதனுடைய இலட்சியம்*. மரபு மனித இலட்சியம் தவத்தால் பிரம்மத்துடன் ஐக்கியமாகி மோட்சம் பெறுவது எனக் கூறுகிறது. பகவான் மரபின் தத்துவம் மனிதனை இறைவனிடமிருந்து பிரித்து விட்டது. அப்படி

பதினெட்டு வகையான பிரிவினைகளை நாம் காண்கிறோம். மனித இலட்சியம் அப்பிரிவினையை அழித்து ஐக்கியத்தை வெளிப்படுத்துவது என்று கூறுகிறார். *முக்கியமாக பரமாத்மாவையும், பாதாளத்தையும் இணைப்பதைக் கூறுகிறார்.*

மரபு மனிதனை உலகில் மனிதனாக அறியும். பகவானுக்கு மனிதன் உலகில் அகந்தையாகவும், பிரபஞ்சத்தில் ஆத்மாவாகவும், அதைக் கடந்து பிரம்மமாகவும் உள்ளது தெரியும். *ஆத்மா கடந்ததையும், புருஷா பிரபஞ்சத்தையும், ஈஸ்வரா உலகையும் குறிக்கும்.* ஈஸ்வரன் பிரளயத்தில் அழிவதாக மரபு கூறுகிறது. ஸ்ரீ அரவிந்தம் பிரளயத்தை அழித்து, ஈஸ்வரன் தன்னுள் புருஷனையும், ஆத்மாவையும் காண்பதைக் கூறுகிறது. இது *ஆறாம் அத்தியாயம்.*

*ஏழாம் அத்தியாயம்:* அகந்தை. அகங்காரம், ஆணவம் என நாம் அறிவது. நடைமுறை வாழ்வுக்குத் தேவைப்பட்டது போல் பிரபஞ்சம் முழுவதும் பரவிய புருஷன் தன்னை வரையறை செய்தது. இது அவசியம். இந்த அவசியம் இனித் தேவையில்லை. பிரபஞ்ச அம்சம் உள்ளிருந்து எழுந்தால் அகந்தை கரையும். அது வேரோடு அழிய வேண்டுமானால் உடலின் ஆத்ம ஜீவியம் வெளிப்பட வேண்டும். மனிதனுடைய பரிணாமத்தில் அகந்தை ஒரு கட்டம். இது இடைப்பட்ட நிலை. தற்காலிகமானது. இதையே முடிவான நம் ஆத்மாவாகக் கொள்வது தவறு. அத்தவற்றால் உலகம் மாயையாகத் தோன்றும். அத்தவறு தீமையை அழிக்கத் தடையாக இருக்கும்.

பகவான் தன் கொள்கையான பரம்பொருள் தானே உலகமாயிற்று என்பதைச் சச்சிதானந்தம் மூலம் எடுப்பதன் முன் வேதாந்த ஞானத்தைப்பற்றிக் கூறுகிறார். வேதாந்தம் பிரம்மத்தைக் கண்டு சர்வம் பிரம்மம் எனவும், உலகம் பிரம்மம் எனவும், மனிதன் பிரம்மம் எனவும், அநித்தியமானவற்றின் பின்னால் நித்தியமானதொன்றுண்டு எனவும் கண்டனர். சிருஷ்டியில் அகந்தை ஏற்பட்டதா, அகந்தை சிருஷ்டித்ததா என்பது அன்றைய தலையாய கேள்வி. பகவான் அக்கேள்வியை அடியோடு விலக்க அகந்தையொழிந்த பார்வையை ஒன்பதாம்



அத்தியாயத்தில் நாடும்முன் இந்த எட்டாம் அத்தியாயத்தை முடிக்கிறார்.

*அத்தியாயம் 9 - சத் புருஷன்*

பரம்பரை சத் புருஷனை மனத்தால் கண்டு, அதைச் சச்சிதானந்தத்திலிருந்து பிரித்து கண்டு மகிழ்ந்தனர். *அத்துடன் சத் புருஷனையே முழு சச்சிதானந்தம் என்றனர்.* பகுதியை முழுமையாக எடுத்துக் கொண்டனர். மற்ற ரிஷிகள் அதே தவற்றை சித்-சக்தியில் செய்தனர். வேறு சிலர் ஆனந்தமே சச்சிதானந்தம் என்ற முடிவுக்கு வந்ததால் ஞான யோகம் (சத்), கர்ம யோகம் (சித்), பக்தி யோகம் (ஆனந்தம்) எனப் பிரிந்து சச்சரவு எழுந்தது.

பகவான் சத், சித், ஆனந்தம் மூன்றும் ஒன்றே எனக் கண்டார். இவர் கருவி சத்திய ஜீவியமாதலால் பகவானால் இதைக் காண முடிந்தது. மேலும் தொடக்கத்திலேயே பகவான் அகந்தையை விலக்கி விட்டார்.

பரம்பரை ஜீவனை (சத்) ஏற்கும். ஜீவியம் இல்லை எனக் கூறும். பகவான் சத் புருஷன் ஜீவன், ஜீவியம் என இரண்டுமாகியது எனக் கூறுகிறார். ஜீவனுக்கும் ஜீவியத்திற்கும் உள்ள தொடர்பை அறிவதே விவேகம் என்கிறார். இது இறைவனுக்கும் உலகுக்கும் உள்ள தொடர்பு.

*நாத்திகவாதி கடவுள் இல்லை, இயற்கையெனும் சக்தியே உண்மை என்றான்.* வேதாந்த கருத்து சித்-சக்தியைப்பற்றிக் கூறுவது நாத்திகவாதியை ஆமோதிப்பது போன்றுள்ளது. இத்தவற்றுக்குக் காரணம் ஜீவியத்தை ஜீவனிலிருந்து பிரித்தது என்று பகவான் கூறுகிறார். *வேதாந்தம் பிரம்மத்தை ஜீவனாகக் காண்கிறது.* இதற்கு ஜீவியம் உண்டு என வேதாந்தம் கூறவில்லை. அதுவே இத்தவற்றுக்கு அடிப்படை. அடுத்த அத்தியாயத்தில் (10) சித்-சக்தி தனியானதல்ல, ஜீவனற்றதல்ல என்கிறார். சித்-சக்தி ஜீவனுடைய சக்தி என்பதால் சித்-சக்தி ஜீவனுடையது எனவும் இயற்கையில் விரயமில்லை எனவும் கூறுகிறார்.

(தொடரும்)

## நெஞ்சுக்குரிய நினைவுகள்

கர்மயோகி

### மனித சுபாவம், வாழ்வின் அம்சங்கள் யோகத்தைச் சந்திக்கும் பொழுது எழும் சிறப்பான நிகழ்ச்சிகள் - உலகம் புதியதாய்க் கருதும் நிலைகள்

– தண்ணீரும் துணியும் சந்தித்தால் நமக்கு ஆச்சரியமாக எதுவும் நிகழ்வதில்லை.

– மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்தால் சிவந்த நிறம் எழுவது ஆச்சரியம்.

– வாழ்வில் இதை ரசாயன மாறுதல் என்போம்.

– மனித சுபாவம் எல்லையற்று எண்ணற்ற திசைகளில் உள் மனதில் விரிகின்றது.
வாழ்வின் அம்சங்களான காலம், இடம், சக்தி, குணம் ஆகியவை அதே போல் அனந்தமாக, அளவின்றி கண்ணுக்குத் தெரியாத லோகங்களில் விரிந்து பரவுகிறது.

– *யோகத்தின் அம்சங்களான சமர்ப்பணம், திருவுருமாற்றம், தலைகீழ் மாற்றம், பரிணாமம், இணையும் லோகங்கள்* **(reconciliation)**, *சிருஷ்டி, ஒரு லோகம் அடுத்த லோகமாக மாறுவது, - ஜீவன் பிரபஞ்சமாவது - இரண்டாகப் பிரிந்து எதிராவது போன்ற நிகழ்ச்சிகள்* மனித சுபாவத்தின் அம்சங்கள். வாழ்வின் அம்சங்களுடன் ஜீவனுள்ள தொடர்பு கொண்டால் கற்பனைக் கெட்டாத அற்புதங்கள் எழும். அவற்றை நான் **Life Response** என்று விவரிக்கிறேன்.

(உ-ம்)

- எலிசபெத்திற்கு டார்சிமீது வெறுப்பு. டார்சிக்கு அவள்மீது காதல்.
- அவளுக்குப் பெம்பர்லிமீது ஆசை. இவை மனித சுபாவம்.
- அவள் பெம்பர்லிக்கு வந்த பொழுது அவள் வெறுப்பை மீறி பெம்பர்லிமீது ஆசை எழுகிறது.



- மணப் பேச்சை அவள் நிராகரித்தபின், அவள் விரும்பும்படி அவன் தன் சுபாவத்தை மாற்ற முயல்கிறான். இது யோக அம்சமான திருவுருமாற்றம்.
- *அவள் பெம்பர்லிக்கு வந்ததால் காலம், இடம், குணம், திருவுருமாற்றம் சந்திக்கின்றன.*
- இதன் விளைவாக அவனுக்கும், அவளுக்கும் மனமாற்றம் என்ற ஆச்சரியம் நிகழ்ந்து இருவரும் வெறுப்பை மறந்து, பிரியத்தை வெளியிடுவதால் £50 வருமானமுள்ள எலிசபெத் £10,000 வருமானமுள்ள பெம்பர்லிக்குத் தலைவியாகும் வாய்ப்பு எழுகிறது.

*இந்த மாற்றம் வாழ்வில் இயல்பானதில்லை. இவை சந்திக்கும் லோகம் ஆத்மா உறையும் அடிமனம்.*

சக்தி வாய்ந்த அம்சங்கள் பல சந்தித்து அற்புதமான ஆச்சரியமான பலன் எழுகிறது.

லிடியா ஓடிப் போனதையும் இது போல் விவரிக்கலாம்.

சட்டப்படி எல்லா நிகழ்ச்சிகளையும் இப்படி விளக்கலாம். *எல்லா நிகழ்ச்சிகளும் இப்படியே ஏற்படுகின்றன.*

நம் வாழ்வில் அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சிகளை இப்படி அறிவது யோகக் கண்ணோட்டம் எனப்படும்.

- யோகத்திற்கு முதல் சட்டம் சமர்ப்பணம்.
அதற்கு உடனடியான பலன் காரியம் பல மடங்கு பெருகி கூடி வருவது.
அதுவே நோக்கமானால் வாழ்வு பெருகும், யோகம் அதே கட்டத்தில் நின்று விடும்.
- நமக்குப் பல்வேறு குணங்கள் உள்ளன. பொறுமை, அவசரம் போன்றவை அவை.
- நமக்குச் சந்தர்ப்பங்கள் பல. உ-ம் ஆபீஸ், கடை, வீடு போன்றவை.
நமக்குத் தொடர்புள்ள மனிதர்கள் பல்வேறு மனிதர்கள்.
செயல் நடக்கும் நேரம் வேறுபடும். இளம் வயது, முதிய வயது, காலை, மாலை, மதியம் போன்றவை.

*எந்த நேரம் எந்த இடத்தில் எவரிடம் எந்தக் குணம், எந்தச் சந்தர்ப்பத்தில் என்ன பலன் கொடுத்தது என நாம் அறியலாம்.*

1. அவை பெரிய நல்லதாக இருக்கும் அல்லது
2. பெரிய கெட்டதாக இருக்கும்
3. ஏற்பட்ட நல்லது, கெட்டது நமக்காகவோ, பிறருக்காகவோ இருக்கும்.
4. பலன் உடனே இருக்கலாம் சற்று பொறுத்தோ வெகு நாட்கள் கழித்தோ இருக்கலாம்.

நோக்கம் வாழ்க்கைப் பலனில்லாமல் யோகமானால்,

- நாம் யோக சட்டங்களை, யோக நிலைகளை, யோக ஞானத்தைப் பெற உதவும் முறை **Life Response.**
- முழுவதும் இவ்வம்சங்களை நாம் அறிந்தால் எந்தப்பலனை எந்த வகையாக ஏற்படுத்துவது என அறிய முடியும். **(Make Life Respond)**
- *சட்டங்கள், அம்சங்கள், நிலைகள், பலன்கள், தொடர்புகள் பூரணமாகப் புரிந்த நிலையில் 10 ஆண்டிற்குப்பின் நிகழ இருப்பதை இப்பொழுது நடக்க வைக்க முடியும்.*
- நமக்கு நோக்கம் பலனில்லாமல், வாழ்வில்லாமல், யோகம், சரணாகதியாக இருப்பது நல்லது.

(தொடரும்)

### ஸ்ரீ அரவிந்த சுடர்

நம்மால் நாற்காலியில் உட்கார்ந்து தியானம் செய்ய முடிவதில்லை. முடிந்தால், தியானம் ஆழ்ந்த நேரம் நம்மை அறியாமல் தரையில் வந்து உட்காருகிறோம். "ஓம் நமோ பகவதே" என்றால் மனமும், ஜீவனும், ஆத்மாவும் நிறைவு பெறுகின்றன. மந்திரம் சொல்லிய பரம்பரை பழக்கம். மந்திரம் மாறுகிறது. பழக்கம் போகவில்லை. பகவான் மந்திரங்கள் எழுதியுள்ளார். அன்னை ஆயிரம் மந்திரங்களைப் பயன்படுத்தினார். தான் எழுதிய எல்லா மந்திரங்களையும்விட Mother, ஸ்ரீ அரவிந்தர் என்ற அவர் திருநாமம் அதிக சக்தியுள்ள மந்திரங்கள் எனவும் கூறினார். நமக்கு தியானம் லயமான நேரம் மந்திரங்கள் மறப்பது தெரியும். லயம் நிலைத்த நேரம் எந்த மந்திரத்தைச் சொன்னாலும் லயம் கலைந்து தியானமாகும் என்பது நம் அனுபவம்.



## அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

2. *தியானத்தைவிட நிஷ்காம்ய கர்மம், பலன் கருதாத செயல் உயர்ந்தது.*

தியானத்தில் ஈடுபடுவது மனம். செயலில் ஈடுபடுவது உடல். ஆர்வத்தோடு செயல்படும்பொழுது உடலும், உணர்ச்சியும் ஈடுபடுகின்றன. ஓர் இலட்சியத்தை உணர்ந்து, அறிந்து, மனம் ஏற்றுக்கொண்டபின் அதற்காக செய்யும் செயலை ஆர்வத்துடன் செய்தால், அந்தச் செயலில் உடலும், உணர்வும், அறிவும் ஈடுபடுகின்றன. அன்னையை ஏற்றுக் கொண்டு அந்த இலட்சியத்தைப் பூர்த்தி செய்ய நடக்கும் எந்த ஒரு செயலையும் சாதகர் ஏற்றுக்கொண்டு ஆர்வத்துடன் செய்வாரானால், தியானத்தில் மனம் அடைந்த தெளிவை ஜீவன் முழுவதும் அடைகின்றன. எனவே செயலால் செய்யப்படும் சேவை இந்த வகையில் தியானத்தைவிட உயர்ந்ததாகும்.

3. *உன்னுடைய கடமைகளை ஆர்வத்துடன் செய். உனக்குப் பிரியமான காரியத்தைச் செய்யப் பிரியப்படாமல், செய்யும் காரியத்தில் பிரியத்தையும், ஆர்வத்தையும் காட்டு.*

கடமைகளைச் செய்கிறவர்கள் குறைவு. ஆர்வத்துடன் கடமையைச் செய்ய வேண்டுமானால் மனிதனுக்கு உயர்ந்த பக்குவம் தேவை. அதைச் செய்தால் அந்தப் பக்குவம் வரும். சினிமா பார்க்கும் ஆர்வத்துடன், பள்ளிக்கூடப் பாடத்தைப் படிக்க வேண்டுமானால் மாணவனுக்கு என்ன மனமாற்றம் தேவையோ, அந்த வகையான மனமாற்றம்தான் இதற்குத் தேவை.

4. *புற நிகழ்ச்சிகள் உனது உள்ளுணர்வையே பிரதிபலிக்கும்.*

ஆன்மிகத் தத்துவப்படி கல்லும், மண்ணும், மரமும், மனிதனும், உலகிலுள்ள எல்லாப் பொருட்களும் பிரம்மாகும்.

அகமும், புறமும் ஒன்றே. எல்லாம் ஒன்றே, ஒரே பிரம்மமாகும். ஆகவே நம் மனத்துள் எழும் எண்ணங்கள் வேறு, நம் செயல்கள் வேறு என நாம் நினைப்பது சரியில்லை. நம் செயல்கள் நம் எண்ணங்களைப் பிரதிபலிக்கின்றன. நாம் பூமியில் பிறந்தோம். அந்த மண்ணும், இந்த மண்ணும் ஒன்றே. நம்மைச் சுற்றியுள்ள சூழலின் குழந்தையே நாம். அதிலிருந்தே நாம் உற்பத்தியாகிறோம். எனவே, உள்ளத்தின் அடியில் உள்ள எண்ணங்கள் நம் அறிவுக்குத் தெளிவாகப் படாவிட்டால், நாம் உள்ள சூழ்நிலையை உற்று நோக்குவோமேயானால், நம் ஜீவனின் ஆழத்தில் உள்ள இரகசியங்கள் தெரியும்.

5. *ஒருவரைத் திருத்த முடிந்தால் திருத்து; இல்லையேல் அவரைப் பற்றிக் குறை கூறாதே.*

ஆசிரியர், பெற்றோர், அதிகாரி, முதலாளி, தலைவர் போன்ற ஸ்தானங்களில் உள்ளவர்களுக்கு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டவர்களைத் திருத்தும் கடமையும், தகுதியும் உண்டு. இது அன்றி, நட்புறவில் ஒருவர் கருத்தை மற்றவர் ஏற்றுத் திருந்திக்கொள்ளும் உறவுகளும் உண்டு. இவற்றிற்குப் புறம்பான இடங்களில் அந்தக் கடமை இல்லை. ஒருவருடைய நடைமுறை குறைபாடு உடையது எனில், அது நம் பார்வையில் பட்டால், அதைப் பற்றி விமரிசனம் செய்யும் உரிமை நமக்கில்லை என அன்னை கூறுகிறார். ஆழ்ந்து நோக்கினால் உலகில் நாம் ஒரே ஒருவரைத்தான் திருத்த முடியும். அது நம்மைத்தான். அதை மட்டும் நாம் செய்தால் போதும் என்பதே கருத்து. ஒருவருடைய குறை-பாடு உள்ள செயல் நம் கண்ணில் பட்டால், ஏன் அது நம் கண்ணில் பட வேண்டும்? நம்முள் உள்ள எது அதை நம் பார்வைக்குக் கொண்டுவந்தது?’ என்று நாம் சிந்திக்கலாம்.

ஒரு நட்புறவில் அவருடைய குறையை நாம் வெளிப்படையாகப் பேசிவிட்டால், அவரைத் திருத்தும் தகுதியும், திறமையும், வாய்ப்பும் போய்விடும். அதனால்தான் அன்னை அப்படிக் கூறியிருக்கிறார்.



6. *ஒவ்வொரு செயலும், ஒவ்வொரு கணமும் இறைவனை நோக்கி நாம் செல்ல என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதைச் செய்ய வேண்டும்.*

பொதுவாக எல்லா மனிதர்களும், ஏற்கனவே இருந்ததைவிட அதிகமாக உயர வேண்டும் என நினைக்கிறார்கள். மேலும் நல்ல உடை உடுத்த வேண்டும், இதைவிட உயர்ந்த பதவி வேண்டும், இன்னும் வசதி வேண்டும், மேலும் புகழ் வேண்டும் எனக் கருதுகிறார்கள். இந்த எண்ணங்கள் எல்லோருக்கும் முழுமையாக உண்டு. அதே ஆர்வத்தை, மேலும் உயர்ந்த இலட்சியங்களைக் கடைப்பிடிக்க வேண்டும், அதிகத் தூய்மை வேண்டும், மேலும் உண்மை தேவை என்றெல்லாம் நினைப்பதும், நினைத்துச் செயல்படுவதும் இறைவனை நோக்கி நாம் செல்வதாகும்.

7. *திருமூர்த்திகள் போன்ற தெய்வங்கள் பூமியின் அளவு இருக்கிறார்கள்.*

சிவபெருமான், மகாவிஷ்ணு, பிரம்மா, இந்திரன், லட்சுமி-யிலிருந்து ஆரம்பித்து நாரதர்வரை வந்தால் ஓர் ஆயிரம் கடவுள்கள் இருக்கும். அன்னை அவர்களுடைய அளவு, அதாவது பரிமாணம், பூமியின் அளவு எனச் சொல்லுகிறார்.

8. *மலர்களுக்குத் தனித்தன்மையுண்டு. அவை தனித்து வைக்கப்-படுவதையே விரும்பும்; பொறாமையும் உண்டு.*

ரோஜா மலர்களை மற்ற மலர்களுடன் சேர்த்து வைத்தால் அவை கவலைப்படுவதாக அன்னை சொல்கிறார். தனியாக அவற்றை வைத்தால் நிமிர்ந்து, தெளிவாக, பெருமையுடன் காணப்படுவதாகச் சொல்கிறார். ஒரு முறை ஒரு ரோஜாவை மற்ற புஷ்பங்களுடன் வைக்க அன்னை எடுத்தார். அந்த மலர் வளைந்து தன் முள்ளால் அன்னையின் கையைக் குத்திற்று. தன் கோபத்தை என்மேல் அந்த ரோஜா காண்பித்தது என்றார்.

9. *விலங்குகட்குப் புலன்கள் மிகவும் கூர்மையாக இருக்கின்றன. மனிதனிடம் பழகும் விலங்குகள் தங்கள் சொந்த உணர்வை இழந்து, அவனை நம்பி வாழ்கின்றன.*

உதாரணமாக காட்டில் உள்ள மாடு விஷப்புல்லைப் பார்த்தால், முகர்ந்து பார்த்து விலகிவிடும். தனக்கு எது நல்லது, எது நல்லதில்லை என்ற பாகுபாடு அவற்றுக்குண்டு. ஆனால் வீட்டில் உள்ள மாடு மனிதனை நம்பிவிடுகிறது. அவன் போடும் புல்லை நம்பிக்கையுடன் தின்னும். காட்டிலிருக்கும்போது அதற்கிருந்த பாகுபாடு இப்பொழுது இருப்பதில்லை. விஷப்புல்லை மனிதன்தான் பிரித்து எடுக்க வேண்டும். அவன் தவறி, விஷப்புல்லை மாட்டிற்குப் போட்டால், அது புல்லைத் தின்று மயங்கிவிழும்.

10. *உலகில் ஆக்க வேலைகளைப் பெண்கள் திறம்படச் செய்கிறார்கள்.*

இந்தக் கருத்தை விளக்க முஸ்லீம் நாடுகளில் உள்ள ஒரு பழமொழியை அன்னை எடுத்துக்காட்டுகிறார். பெண்களிடம் கிடைத்த பணம்போல என அப்பழமொழி கூறுகிறது. தமிழ்நாட்டில் 'ஆண்களிடம் கிடைத்த குழந்தையும், பெண்களிடம் கிடைத்த பணமும் உருப்படாது' என்பது வாக்கு. இது ஆண்களுக்குக் குழந்தை வளர்க்கத் தெரியாது, பெண்களை ஏமாற்றிப் பணத்தை மற்ற ஆண்கள் எடுத்துக் கொள்வார்கள் என்பதைக் குறிக்கும். சில துறைகளில், தமிழ்நாட்டில் ஆண்களும், பெண்களும் ஏராளமாகச் சம்பாதிக்கின்றனர். அங்குப் பல ஆண்கள் பணத்தை இழந்துவிடுகிறார்கள். சிலரே அப்படிச் செய்வதில்லை. ஆனால் பெரும்பணம் சம்பாதித்த பெண்களில் பணத்தை இழந்தவர் மிகக் குறைவு.

11. *பெற்றோர்கள் தங்களுக்கு விரோதமான குணங்களைத் தம் குழந்தைகளிடம் காண்பர்.*

மனிதனிடம் நல்ல குணங்களும், கெட்ட குணங்களும் கலந்து காணப்படுகின்றன. அவன் நல்லதை வெளிப்படையாகக் காண்பிக்கின்றான். மற்ற குணங்கள் வெளிப்படாதவாறு பார்த்துக்கொள்கிறான். அவை வெளிப்படவில்லை என்றாலும், அவனிடமே இருக்கின்றன. அவை குழந்தைகளிடம் தெரியும் என்று அன்னை கூறுகிறார்.



12. *இந்திய விவசாயி, ஐரோப்பிய மேதைகளைவிட இறைவனை உணர்ந்திருக்கிறான்.*

இந்தியா உலகின் குரு. ஆத்மிகம் வளர்ந்த நாடு. இங்கிலாந்தின் தொடர்பு ஏற்பட்ட இடமெல்லாம் இந்தியா தன் ஆத்மிகத்தை இழந்தது; அழுகிப்போயிருக்கின்றது. இன்னும் 70% இந்தியா தூய்மையாக இருக்கிறது. உலகில் இந்தியாவுக்கு அடுத்தபடியாகப் பிரான்ஸ் விளங்குகிறது. ஒரு நாள் இந்தியா உலகத்தின் தலைவராகவும், குருவாகவும் மிளிரும் என அன்னை கூறுகிறார்.

13. *இந்தியாவின் சீதோஷ்ண நிலை வடதுருவத்தைப் போல் மாறும்; பனி பெய்யும்.*

ஆரோவில் நகரத்தில் வடதுருவத்திலுள்ள சில செடி-களையும், மரங்களையும் கொண்டுவந்து அன்னை நடச் சொன்னார். இந்த வெய்யிலில் அவை கருகிப்போய்விடும் என்று சாதகர்கள் சொன்ன பொழுது, வடதுருவத்தின் சீதோஷ்ண நிலை இங்கு வரும் என்று கூறினார்.

14. *சமஸ்கிருதம் மட்டுமே ஆன்மிகக் கருத்துகளைத் தெளிவாகத் தெரிவிக்க முடியும்.*

15. *ஒருவன் இறந்தவுடன் அவனது உயிர் உடலை விட்டுப் போவது இல்லை. அதற்குச் சில நாட்களாகின்றன. அதற்குள் உடலைத் தகனம் செய்வதால் அந்த உயிர் அதிர்ச்சியடைகிறது. புதைப்பதே நல்லது என்று அன்னை கூறுகிறார்.*

16. *உயிரில்லாத பொருட்களையும் கவனமாக வைத்திருந்தால் அவை நம் கவனத்துக்குரிய சேவையைச் செய்கின்றன.*

17. *நம்மால் மன்னிக்க முடியாது என்று சொல்லக்கூடிய குற்றம் ஒன்றில்லை.*

18. *'அதற்குரிய நேரம் வரவில்லைபோலும்' என நாம் பல சமயங்களில் சொல்கிறோம். அன்னை, நம் மனப்பாங்கை*

*மாற்றிக்கொண்டமாத்திரத்தில் 'அதற்குரிய நேரம் வந்துவிடும்' என்கிறார். 'அது நம் கையிலிருக்கிறது'.*

19. *1967-க்குப்பின் உலக அரசாங்கங்கள் மேலும் மேலும் தெய்வீகச் சக்திக்குட்பட்டுச் செயல்படுகின்றன.*

20. *உடல் நோயுள்ளபோது எவ்வளவுக்கெவ்வளவு நாம் நோயை கவனிக்கின்றோமோ, அவ்வளவுக்கவ்வளவு நோய் வளரும்.*

21. *மனிதர்களிடையே நிலவும் அன்பு* (human love) *சுயநலத்தால் நிரம்பியது.*

22. *அன்னையை நாடி வந்த அனைவரும், ஆசிரமத்திலேயே தங்கி உள்ளவர்களும், கொஞ்ச நாள் தங்கியிருந்தவர்களும், முற்பிறவிகளில் அன்னையுடனிருந்தவர்கள்.*

23. *பாவம் என்பது நாம் செய்யும் செயலில் இல்லை. தவறான காரியங்களைச் செய்யும்பொழுது அவற்றால் நாமடையும் கீழான இன்பத்தால்தான் பாவம் ஏற்படுகிறது.*

24. *பல பிறவிகளில் செய்யும் தவப் பயனை, ஆசிரமத்திலிருந்து யோகம் செய்பவர்கள் சில மாதங்களில் பெறலாம்.*

25. *'சண்டை என்று ஏற்பட்டபின் தவறு' இரு கட்சிகளிலும் உள்ளது.*

26. *அவசரம், திறமைக் குறைவுக்கு அஸ்திவாரம்.*

27. *நியாயமாக எடுத்துச் சொன்னால், குழந்தைகள் அவற்றை ஏற்றுக்கொள்ளும்.*

28. *நேர்மையாக வளர்ந்து, ஆண்டவனை அடைய குழந்தைகட்கு நாம் உதவி செய்ய வேண்டும்.*

29. *பணம் ஓர் இடத்தில் குவிந்து இருக்கக்கூடாது. அது நடமாடிக் கொண்டேயிருக்க வேண்டும்.*

30. *மனத்தில் உண்மையில்லாதவர்களைச் சந்தித்தால் உடல் சீக்கிரத்தில் களைத்துவிடும்.*

(தொடரும்)



## அன்பர் அனுபவம்

அன்னையை அறிந்ததிலிருந்து அனேக நிகழ்ச்சிகள் அவருடைய சக்தியை உணர்த்தும் வாயிலாக நடப்பதை பல முறை என் வாழ்வில் கண்டு நெகிழ்ந்துள்ளேன். அது போல் சமீபத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை அன்னை அன்பர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

என் பெண் +2 படிக்கிறாள். +2 இறுதிப் பரிட்சைக்கு நன்றாக படித்திருந்தாலும் அவளுக்கு பயம் அதிகமாக இருந்தது. அவளை பரிட்சைக்கு அனுப்பி விட்டு நான் ஒவ்வொரு நாளும் வீட்டில் அன்னையிடம் அமர்ந்து அவருடைய புத்தகங்களை வாசிக்க ஆரம்பித்தேன். திரு.கர்மயோகி அவர்களுக்கு பரிட்சையைப் பற்றி எழுதி **Blessing Packet** வாங்கி அதை அவளிடம் கொடுத்து பிரியாமல் தன்னோடு வைத்திருக்கும்படி கூறினேன். அன்று **Physics Practicals exam.** பரிட்சை ஆரம்பித்து அரை மணியில் **Practicals** முடித்து பரிட்சைத் தாளை **examiner**-இடம் கொடுத்தாள். கொடுத்தவுடன் மனத்தில் ஏதோ ஒரு சந்தேகம் எழுந்தது. **Practicals** தான் செய்தது சரியில்லை எனவும் தான் எடுத்த **reading** தவறு எனவும் தோன்றியது. ஏன் இப்படி தோன்றுகிறது என்று புரியவில்லை. பேப்பரை எப்படி திருப்பி வாங்குவது என்று தயக்கம் ஏற்பட்டது. **Examiner**-இடம் கொடுத்த பேப்பரை திருப்பிக் கொடுக்க மாட்டார்களே என்ன செய்வது என்று நினைத்தபடி **Exam hall**-ஐ விட்டு வெளியில் வராமல் தயங்கி நின்றாள். இதைக் கண்ணுற்ற அவளுக்குத் தெரிந்த ஆசிரியர் அருகில் வந்து, என்ன? ஏதோ போன்று இருக்கிறாயே என விசாரித்தார். தான் **Practicals** செய்து முடித்து பேப்பரை தந்ததையும், ஆனால் அதில் ஏதோ ஒரு தவறு உள்ளது என்று தோன்றுவதையும் அவரிடம் கூறினாள். ஆசிரியர் **examiner**-இடம் சென்று பேப்பரை வாங்கி இவளிடம் தந்தார். **Practicals**-ஐ திரும்பச் செய்யச் சொன்னார். ஆனால் எத்தனை முறை செய்தாலும் அதே **reading** வருகிறது. அந்த விடை தவறு என்று மனம் நினைக்கிறது. அது தவறு என்று

தோன்றினாலும் எங்கு என்ன தவறு என்று புரியவில்லை. Blessing packet-ஐ கையில் இறுகப் பிடித்துக் கொண்டு அன்னையை அழைத்தாள். எங்கு தவறு என்று புரியவில்லை. அன்னையே எனக்குக் காட்டி அருளுங்கள் என்று மனம் பிரார்த்தனை செய்தபடி இருந்தது. திடீரென்று அவளுக்கு கொடுக்கப் பட்டிருந்த equipment சரியில்லை என்று தோன்றியது. Equipment-ஐ check செய்தாள். அதில் wire சரியாக பொருத்தப்படவில்லை என்பது தெரிந்தது, அதனால் தவறான reading காட்டுகிறது என்று புரிந்தது. ஆசிரியரிடம் “எனக்கு கொடுக்கப்பட்டுள்ள equipment சரியில்லை” என்று கூறி அவரிடம் அதில் wire பொருத்தப்படாமல் உள்ளதைக் காண்பித்தாள். அனைவரும் அவரவர் equipment-இல் வேலை செய்து கொண்டிருப்பதால் அவளுக்கு மாற்றிக் கொடுக்க வேறு equipment இல்லையே என்ன செய்வது என்று ஆசிரியர் குழம்பினார். பரிட்சை நேரம் கடந்து கொண்டேயிருந்ததால் செய்வதறியாமல் திகைத்தார். பெண் ஆசிரியரிடம் இந்த equipment-ஐயே நான் சரி செய்து practicals-ஐ முடிக்கிறேன், நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்று கூறி, அன்னையை அழைத்துக் கொண்டே equipment-ஐ சரி செய்ய முனைந்தாள். ஐந்து நிமிடங்களில் connection சரி செய்து equipment தயாரானது. அதற்குப் பின் அரை மணியில் practicals செய்து reading எடுத்தால் இந்த முறை விடை திருப்தியாக இருந்தது. பேப்பரை examiner-இடம் தந்து வீட்டிற்கு வந்து அழுகையை நிறுத்த முடியாமல் நடந்தது அனைத்தையும் கூறினாள். அவள் practicals பயமில்லாமல் சரியாக எழுத வேண்டி அன்று நான் படித்த புத்தகம் ‘பரம்பொருள்’. அன்னையே அவளுடன் இருந்து தைரியத்தையும் தெளிவையும் அளித்து பிரச்சனையைத் தீர்த்துள்ளார் என்று உணர்ந்து அன்னைக்கு நன்றி கூறினேன்.

தனக்கு வந்த விடை சரியில்லை என்றும், அதன்பின் equipment சரியில்லை என்றும் எப்படி திடீரென்று உள்ளுணர்வில் தனக்குப் புரிந்தது என்று நம்பமுடியாமல் ஆச்சரியப்பட்டாள். அவள் கூறக் கூற எனக்கு மெய் சிலிர்த்தது. அப்போது நடந்தது



முழுவதும் கனவாக உள்ளது போல் அவளுக்குத் தோன்றியது. Equipment மீது சந்தேகம் வர வாய்ப்பில்லை. அந்த விஷயம் மனதில் பட்டது, Equipment ஐந்து நிமிடத்தில் சரியானது அன்னை அருள். அதை சரி செய்து விடைத்தாளை கொடுத்து விட்டு வந்தாலும் பரிட்சை result வரும் வரையில் எதுவும் நிலையில்லை என்றே இருந்தது. பரிட்சை result வந்ததும் முதலில் physics practicals mark என்ன என்று கண் ஓடியது. Practicals-இல் மொத்த மதிப்பெண்கள் 50. அவள் 50 வாங்கியிருந்தாள்.

Exam-ஐ முடித்து பேப்பரைக் கொடுத்த பின் அதிலுள்ள தவற்றை அவளுக்குப் புலப்படுத்தி, சரியில்லாத equipment-ஐ அவளே சரி செய்யும் அறிவைத் தந்து, பரிட்சையை சரியாக எழுத உதவியது அன்னையின் அருள் அற்புதமாக செயல்பட்ட விதம். Exam, Equipment, Mark இவற்றிற்கு மேலாக, இவ்வனுபவம் அன்னையை நான் இன்னும் பக்தியுடனும் நம்பிக்கையுடனும் நெருங்கி வர ஒரு பாலமாக அமைய வேண்டும் என்று அன்னையை மனமாரப் பிரார்த்திக்கிறேன்.

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மரபு உலகை அறியாது. இறைவன் எப்படி உலகை உற்பத்தி செய்தான் என்பதை ரிஷிகள் அறியவில்லை. அகம், புறமாக பிரம்மம் பிரிந்தபொழுது புறம் உலகமாயிற்று என பகவான் அக்கேள்விக்குப் பதிலளிக்கிறார். பிரம்மம் அனைத்தையும் கடந்தது என்பதால் உலகை சிருஷ்டிக்கும் திறனற்றது என்பது மரபு கருதுவது. **பகவான் அதை ஏற்கவில்லை. சிருஷ்டிக்கும் திறனற்றது பிரம்மம் என்பதை பகவான் சிருஷ்டிக்கும் திறனைக் கடந்தது என்று கொள்கிறார்.** பிரம்மம், சிருஷ்டிக்கும், சிருஷ்டி செய்யாமலுமிருக்கும் என்று கூறி உலகம் பிரபஞ்சத்தால் சிருஷ்டிக்கப்பட்டதே எனவும் கூறுகிறார்.

**அன்னை இலக்கியம்**

# மீன்கொடி

(சென்ற இதழின் தொடர்ச்சி)

சமர்ப்பணன்

## 8. பெண் பார்த்தல்

மீசை தாத்தாவோடும், கவர்னசத்தையோடும் ஜமுனாவைப் பெண் பார்க்க மதுரைக்குப் போனேன். யசோதா அக்காவிடம் போனில் தகவல் சொல்லி அழைத்தேன். அண்ணார்களும், அண்ணிகளும், அக்காவும் வரவில்லை. வர முடியவில்லை. வேறு முக்கிய வேலைகள் குறுக்கிடாதிருந்தால் நிச்சயம் வந்திருப்பார்கள். நான் அதைச் சொன்னபோது, ஊன்றுகோலால் தரையை பலமாகத் தட்டி 'முட்டாள்' என்று மீசை தாத்தா உறுமினார். வேறொன்றும் சொல்லவில்லை. கோபம் வந்தால் மீசை தாத்தா ஊன்றுகோலைத் தட்டுவார் அல்லது உருட்டுவார்.

'நல்ல காரியத்திற்கு மூன்று பேர் போவது சரியில்லை' என்று கவர்னசத்தை சொன்னார்.

'நீ ஒருத்தியே நான்கைந்து விஷமிகளுக்குச் சமம்' என்று கூறிவிட்டார் மீசை தாத்தா.

மீனாட்சி அம்மன் கோவிலின் கிழக்குக் கோபுர வாசலுக்கு அருகே இருந்த நெரிசலான பல குறுகலான தெருக்கள் ஒன்றில் மதுரை மாமாவின் வீடு இருந்தது. சிறிய வளையல் கடை. அதனருகே சம்பந்தமில்லாமல் பத்திரத்தாள் விற்கும் கடை. அதனெதிரே ஓடு வேய்ந்த, திண்ணை வைத்த பழங்காலத்துச் சிறிய வீடு. நாங்கள் ஆட்டோவில் சென்று இறங்கியபோது மாமாவும், அவர் மகன் சுந்தரமும் வாசலில் எங்களை வரவேற்கத் தயாராக நின்று கொண்டிருந்தனர். தெருவும், வீடும் எனக்கு மிகவும் பரிச்சயமானவை போன்ற உணர்வு எழுந்தது.

விரிக்கப்பட்டிருந்த ஜமுக்காளத்தில் எல்லோரும் உட்கார்ந்தோம். சிறிது நேரம் சம்பிரதாயமாக பெரியவர்கள் பேசியபின், ஜமுனா எல்லோருக்கும் காபி கொண்டு வந்து தந்தாள். தாத்தாவிற்கு நமஸ்காரம் செய்தாள். பெண்களோடு



உட்கார்ந்திருந்த கவர்னசத்தையைப் பார்த்து புன்னகைத்தாள். அப்போது ஓரிரு கணங்கள் அவள் முகத்தைப் பார்த்தேன்.

சில நிமிடங்கள் எங்கள் எதிரே உட்கார்ந்திருந்து விட்டு உள்ளே போய் விட்டாள். நான் அவள் முகத்தைப் பார்க்கத் துணியவில்லை. காபி தரும் போது மருதாணி போட்ட கை விரல்களையும், கால் விரல்களையும் மட்டுமே பார்த்தேன்.

'பரமா, நீ பெண்ணோடு தனியாக ஏதாவது பேசிவிட்டு வா' என்றார் மீசை தாத்தா.

நான் தயங்கினேன். 'தம்பி வெட்கப்படுகிறது' என்று ஒரு பெண் குரல் கூற, பல பெண்கள் சிரிக்கும் ஒலி காதில் விழுந்தது. நான் எவரையும் நிமிர்ந்து பார்க்கத் துணியவில்லை.

'உள்ளே வாருங்கள் தம்பி' என்று மதுரை அத்தை அழைத்தார். உள்ளறைக்கு அழைத்துச் சென்று என்னை விட்டுவிட்டு அவர் மெல்ல அசைந்து வெளியே போய் விட்டார்.

அந்த சிறிய அறை தெருவோரமாக இருந்ததால் ஜன்னல் கதவு மூடப்பட்டு சூரிய வெளிச்சம் இல்லாதிருந்தது. ஓடுகளுக்கிடையே போடப்பட்டிருந்த பல மரச்சட்டங்களில் ஒன்றில் மாட்டப்பட்டிருந்த நீண்ட கம்பியைப் பிடித்து தொங்கியபடி, வயதாகி நிறம் மாறி விட்டிருந்த மின்விசிறி சிரமப்பட்டு சுற்றிக் கொண்டிருந்தது. உலகில் முதன்முதலில் மின்விசிறி செய்யப்பட்டபோது வாங்கியதாக இருக்கக் கூடும்.

இன்னொரு மரச்சட்டமொன்றில் தொங்கிய நீண்ட வயரின் முனையில் மஞ்சள் நிற முட்டை விளக்கு எரிந்து கொண்டிருந்தது. விளக்கு வெளிச்சத்தின் அடியில் தரையில் விரித்த பழைய பாயின் மீது ஜமுனா அமர்ந்திருந்தாள். பொன்னிற பார்டர் வைத்த மயில் வண்ண சேலை அணிந்து, அதே நிறத்தில் முழங்கை வரை நீண்ட ரவிக்கை அணிந்திருந்தாள். நெருக்கமாக தொடுக்கப்பட்டிருந்த மல்லிகைப் பூச்சரத்தை சூடியிருந்தாள். ஒரே ஒரு சிறிய தங்கச் சங்கிலியும், கைகளில் மெல்லிய தங்க வளையல்களும் அணிந்திருந்தாள்.

என்னைப் பார்த்ததும் எழுந்திருக்க முயன்றாள். பதற்றத்துடன் கைகளைக் கூப்பி 'வணக்கம், எழுந்திருக்க வேண்டாம்.

உட்காருங்கள்' என்று கூறி விட்டு நான் பாயை விட்டுத் தள்ளி தரையில் உட்காரப் போனபோது, புன்னகைத்துவிட்டு 'பாயில் உட்காரலாமே' என்றாள். பாயின் ஓரத்தில் உட்கார்ந்தேன்.

'வயதில் பெரியவர்கள் சின்னவர்களை வாழ்த்துவார்கள். வணக்கம் சொல்ல மாட்டார்கள்' என்றாள் ஜமுனா.

'எனக்கு வணக்கம் சொல்ல வேண்டும் போலிருந்தது' என்றேன்.

'வயதானவளாகத் தெரிகிறேனா?' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் ஜமுனா.

அவளது சம்பிரதாயமற்ற இயல்பான பேச்சால் என் பதற்றம் அடங்கி நானும் இயல்பு நிலைக்குத் திரும்பினேன். 'அப்படியில்லை' என்று கூறி நிறுத்தினேன். சொல்லத் தோன்றியதை ஜமுனாவிடம் சொல்வது முறையாக இருக்குமா என்ற குழப்பத்தில் பேசாதிருந்தேன்.

'சொல்ல நினைப்பதை சொல்லி விடலாமே. நான் மட்டும்தானே இருக்கிறேன்?' என்றாள் ஜமுனா.

'கோவிலில் மீனாட்சி நின்று கொண்டிருக்கிறார். இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்' என்றேன்.

'மீனாட்சிதான் சொக்கநாதருக்கு சொக்குபொடி போடுவாள். இங்கே தலைகீழாக இருக்கிறது' என்றாள் ஜமுனா.

'அறைக்குள் நுழைந்து உங்களைப் பார்த்ததுமே எனக்கு அப்படித்தான் தோன்றியது. இந்த இருட்டான அறையில், மஞ்சள் விளக்கு வெளிச்சத்தில், அலங்காரத்துடன் நீங்கள் உட்கார்ந்திருப்பது, இருண்ட கர்ப்பக்கிருகத்தில் அமர்ந்திருக்கும் அம்மனுக்கு கற்பூர ஆரத்தி காட்டுவது போலிருந்தது' என்றேன். ஒரு பெண்ணிடம் அத்தனை வார்த்தைகள் நான் தொடர்ந்து பேசியது என் வாழ்வில் அதுவே முதல் முறை.

ஜமுனாவின் கண்கள் கனிந்தன. பதிலெதுவும் கூறவில்லை.

'பல காலமாக யோகம் செய்பவருக்கு, அவர் எதிர்பார்க்காத நேரத்தில் நெஞ்சுக் குகையில் பொன்னொளியோடு ஆன்மாவின் தரிசனம் கிடைத்தது போலிருந்தது என்றால் மேலும் பொருத்தமாக இருக்கும்' என்றேன்.



'கதை, காவியம், தத்துவம் என்று கையில் கிடைக்கும் எல்லாவற்றையும் தராதரம் தெரியாமல் வாசிப்பீர்கள் என்று கேள்விப்பட்டேன்' என்றாள் ஜமுனா.

'யார் சொன்னது?' என்றேன்.

'பெண் கேட்டால் வரனைப் பற்றி தெரிந்து கொள்ளாமல் உடனே கொடுத்து விடுவார்களா? விசாரித்தவர்கள் உங்களைப் பற்றி பல விஷயங்கள் சொன்னார்கள்' என்றாள் ஜமுனா.

'நல்லதாக ஒரு வார்த்தை இருக்காதே' என்றேன்.

சிரித்தாள் ஜமுனா.

'உங்களை எத்தனையோ காலமாகத் தெரியும் என்ற உணர்வு தோன்றிக் கொண்டே இருக்கிறது' என்றேன்.

'எனக்கும் எட்டு வருஷங்களாக அப்படித்தான் தோன்றிக் கொண்டேயிருக்கிறது' என்றாள் ஜமுனா.

'அதென்ன கணக்கு? இப்போதுதானே என்னை பார்க்கிறீர்கள்?' என்று கேட்டேன்.

'நினைவில்லையா? எட்டு வருஷங்களுக்கு முன் நிஜமாகவே நாம் ஒரு முறை சந்தித்தோம். அப்போது எனக்கு பதினைந்து வயது' என்றாள் ஜமுனா.

'அப்படியா?' என்றேன்.

'நீங்களும், உங்கள் மூத்தவர்களும் கொடைக்கானலுக்கு போகும் வழியில் மதுரைக்கு வந்தீர்கள். மீசை தாத்தா எங்கள் வீட்டில் தரச் சொல்லி ஒரு பெரிய ஜவுளி மூட்டையை கொடுத்தனுப்பி இருந்தார்' என்றாள் ஜமுனா.

'எந்த ஊருக்கு நான் போனாலும் மீசை தாத்தா நாலைந்து வீடுகளுக்கு இப்படி ஏதாவது கொடுத்தனுப்புவார். யாருக்கு, எப்போது, எதைக் கொடுத்தேன் என்பது நினைவில் இல்லை' என்றேன்.

'கொடுத்தவர் மறக்கலாம். வாங்கியவள் மறக்கலாமா? நீங்கள் மட்டும் பைகளை தூக்கிக் கொண்டு மத்தியான வெயிலில் வந்தீர்கள். வேர்வையில் நனைந்து போன முகம், கலைந்த தலை, வெள்ளையில் மெல்லிய நீலக் கட்டங்கள் போட்ட கசங்கிய சட்டை, சரியாக இஸ்திரி போடாத சாம்பல் நிற கால் சட்டை, ரப்பர் செருப்பு. உங்களைப் பார்க்கவே

பரிதாபமாக இருந்தது. அம்மா ஊரில் இல்லை. அப்பா வீட்டில் இல்லை. அதனால் நான்தான் உங்களிடமிருந்து பைகளை வாங்கிக் கொண்டேன். காபியும் போட்டு தந்தேன்' என்றாள் ஜமுனா.

'இப்போது மங்கலாக நினைவிற்கு வருகிறது. ஆனால் முகம் தெளிவாக நினைவில் இல்லை' என்றேன்.

'நிமிர்ந்து என் முகத்தை ஒரு முறையாவது பார்த்திருந்தால்தானே நினைவில் நிற்கும்?' என்றாள் ஜமுனா.

'அன்று நான் என்ன பேசினேன்?' என்று கேட்டேன்.

'காபி நன்றாக இருந்தது என்று முணுமுணுத்ததைத் தவிர பேசவே தெரியாதவர் போல நடந்து கொண்டீர்கள்' என்றாள் ஜமுனா.

'அறிமுகமில்லாத இளவயது பெண்ணிடம் எப்படிப் பேசுவது?' என்றேன்.

'இப்போது மட்டும் எப்படி பேச்சு வருகிறது?' என்றாள் ஜமுனா.

'நமக்குத்தான் எட்டு வருஷங்களுக்கு முன்பே அறிமுகமாகி விட்டதே!' என்றேன்.

'பேச்சில் சாமர்த்தியசாலிதான். இன்றுகூட நான் காபி போட்டுத் தந்தேன். நீங்கள் கொண்டு வந்தது என்னவோ!' என்றாள்.

'என்னையே கொண்டு வந்திருக்கிறேனே' என்றேன்.

'புதுமைப்பித்தனின் "கடவுளும், கந்தசாமிப் பிள்ளையும்" கதையில் வரும் பழைய வசனம். புதிதாக ஒன்றும் தோன்றவில்லையா!' என்றாள் ஜமுனா.

'நிறைய வாசிப்பீர்களோ?' என்று கேட்டேன்.

'எப்போதாவது நூலகத்திற்குப் போவேன். நூலகத்தையே வாசிக்க வேண்டும் என்று தோன்றும். எதையாவது புரட்டிப் பார்த்து விட்டு வருவேன்' என்றாள் ஜமுனா.

'ஒவ்வொரு தடவை வரும்போதும் உங்களுக்கு வேலை வைத்து சிரமம் தருகிறேன்' என்றேன்.

'சிரமமே இல்லை. ஏதோ நான் உலகத்திற்கே காபி போட்டு கொடுத்தது போல் பேசுகிறீர்கள்! நமக்குப் பிடித்தவர்களுக்கு



பிடித்ததைச் செய்வதில்தானே சந்தோஷம் கிடைக்கிறது? எனக்கு பதினைந்து வயதாகும்போதே அம்மா வெளியூர் போய்விட்டார். அப்போதிருந்து படித்துக் கொண்டே எல்லா வீட்டு வேலைகளும் செய்து பழகிவிட்டேன். எந்த வேலையும் எனக்கு சிரமமில்லை. சந்தோஷமாக வீட்டையும், குடும்பத்தையும் கவனித்துக் கொண்டு வருகிறேன்' என்றாள் ஜமுனா.

'இனிமேல் என்னையும், நம் வீட்டையும் பார்த்துக் கொள்ளுங்களேன்' என்றேன்.

'அதற்கென்ன?' என்று விழிகள் விரிய சொன்ன ஜமுனா சுதாரித்துக் கொண்டு 'இதை என்னிடமா சொல்வது? வெளியே போய் பெரியவர்களிடம் சொல்ல வேண்டும்' என்றாள்.

எழ முயற்சித்தேன். 'என்ன அவசரமோ!' என்றாள் ஜமுனா.

'சரி' என்று கூறி உட்கார்ந்து கொண்டேன்.

'இப்படி பிள்ளையார் போல உட்கார்ந்து பேசிக் கொண்டே இருந்தால், வெளியே இருப்பவர்கள் கேலி செய்து சிரிப்பார்கள்' என்றாள் ஜமுனா.

'ஆமாம்' என்று கூறி எழுந்தேன். 'இன்னொரு காபி கிடைக்குமா?' என்று கேட்டேன்.

'அடிக்கடி காபி சாப்பிடுவது உடம்பிற்கு நல்லதில்லை. பழச்சாறு தருகிறேன். போகும் வழியிலும் கண்ட இடத்தில், கண்ட உணவை சாப்பிட வேண்டாம்' என்று கூறியபடி ஜமுனாவும் எழுந்தாள்.

'வருகிறேன்' என்று கூறி கை கூப்பினேன்.

'இப்போது நான் நின்ற கோல மீனாட்சியா!' என்றாள் ஜமுனா.

நான் சிரித்துக் கொண்டு அறைவாயிலை நோக்கி நடக்கும்போது, அவள் தன் கைகளை லேசாக அசைத்ததால் எழுந்த வளையோசை கேட்டு திரும்பிப் பார்த்தேன்.

'காத்துக் கொண்டேயிருப்பேன்' என்றாள் ஜமுனா. சடங்கு, சம்பிரதாய ரூபங்களில் சமூகத் தடைகள் இல்லாவிட்டால் அப்போதே என்னுடன் வந்திருப்பாள் என்று தோன்றியது.

'காதலடி நீயெனக்கு, காந்தமடி நானுனக்கு; வேதமடி நீ யெனக்கு, வித்தையடி நானுனக்கு; எல்லையற்ற பேரழகே!

எங்கும் நிறை பொற்சுடரே! முல்லைநிகர் புன்னகையாய்! மோதுமின்பமே!' என்று தோன்றியது.

அவளது விழிவிளக்குகள் விரித்த பேரொளிப்பாதையின் வழியே அறையை விட்டு வெளியே நடந்தேன். அது ஆரம்பம்தான் என்பதை அப்போது நான் அறிந்திருக்கவில்லை.

மீசை தாத்தா எல்லோர் முன்னிலையிலும் என்னிடம் ஜமுனாவைப் பற்றி ஏதாவது கேட்பார் என்று எதிர்பார்த்தேன். அவரோ 'சென்னைக்குப் போய் கடிதம் எழுதுகிறேன்' என்று கூறிவிட்டு கிளம்பிவிட்டார்.

ஆட்டோவில் திரும்பும்போது 'அலங்காரம் விசேஷமாக இல்லை. சின்ன சங்கிலி மட்டும்தான் போட்டிருந்தாள்' என்றார் கவர்னசத்தை.

'வசதி குறைவான நல்ல குடும்பம்' என்றார் மீசை தாத்தா.

'அக்கம்பக்கத்தில் ஒரு நாளைக்கு இரவல் வாங்கிப் போட்டால் என்ன தப்பு? பார்க்க நன்றாக இருக்குமே. பெண்ணின் அம்மாவும் அதேதான் சொன்னாளாம். ஜமுனாதான் 'கடன் வேண்டாம், என்னிடம் இருப்பதை மட்டும் தெரிந்து கொள்ளட்டும்' என்று சொல்லிவிட்டாளாம். பொதுவாக இந்த காலத்துப் பெண்களுக்கு வாய் அதிகம்தான். இவள் எல்லோரையும் மிஞ்சக் கூடிய அதிகப் பிரசங்கி. பெரியவர்களுக்கு ஒரு நமஸ்காரம் செய்யத் தோன்றியதா?' என்றார் கவர்னசத்தை.

மீசை தாத்தா ஊன்றுகோலை கைகளில் உருட்டினார். அவருக்குக் கோபம் வரத் தொடங்கிவிட்டது. 'ஜமுனா எட்டு, பத்து வருஷமாக குடும்ப நிர்வாகம் செய்கிறாள். யாரை எங்கே வைக்க வேண்டும் என்பதை நன்றாக தெரிந்து வைத்திருக்கிறாள்' என்றார்.

'அதை விடுங்கள். அழகி என்றார்கள். முகமும், உடம்பும் லட்சணமாக இருந்து என்ன பிரயோஜனம்? சிவப்பில்லை. மாநிறமாகத்தான் இருக்கிறாள்' என்றார் கவர்னசத்தை.

தாத்தா பதில் சொல்லாமல் ஊன்றுகோலை மேலும் வேகமாக உருட்டினார்.



சென்னை திரும்பும்போது, காவிரியில் நீரோடத் தொடங்கியிருந்தது. 'இன்றுதான் நீர் திறந்து விட்டிருக்கிறான் போலிருக்கிறது' என்றார்.

தொலைவில் மலைக்கோட்டை பிள்ளையார் கோவில் சிறிய புள்ளியாகத் தெரிந்தது. 'இப்படி பிள்ளையார் போல உட்கார்ந்து பேசிக் கொண்டே இருந்தால்?' என்று ஜமுனா கேட்பது போலிருந்தது.

காவிரி மேம்பாலத்தில் ரயில் வேகமாக ஓடியபோது எங்கள் எதிரே உட்கார்ந்திருந்த பெரியவர் பையிலிருந்து எடுத்த சில்லறைக் காசுகளை 'தாயே, எல்லாம் நல்லபடியாக நடக்கவேண்டும்' என்று கூறிவிட்டு நதி நீரில் வீசி எறிந்தார்.

'ஏதோ சாஸ்திரத்திற்கு பத்து காசு போட்டால் போதாதோ! ஆற்றில் போட்டாலும் அளந்து போட வேண்டும் என்று கேள்விப்பட்டதில்லையா? வயிற்றெரிச்சலாக இருக்கிறதே!' என்றார் கவர்னசத்தை.

'எனக்கு ஜமுனாவைப் பிடித்திருக்கிறது' என்றேன்.

'அது பிரச்சனையில்லை. பெண்ணுக்கு உன்னை பிடித்திருக்கிறதா என்பது தெரிய வேண்டும்' என்ற தாத்தா நரைத்த மீசையை முறுக்கிவிட்டுக் கொண்டு சிரித்தார்.

மீசை தாத்தா அபூர்வமாகத்தான் சிரிப்பார்.

## 9. நிச்சயதார்த்தம்

சென்னை திரும்பியபின் புருஷண்ணார் மட்டும் என்னிடம் 'என்னடா, முடித்தாகி விட்டதா?' என்று கேட்டுவிட்டு பதிலை எதிர்பார்க்காமல் போய்விட்டார். மதுவண்ணார் எதுவும் கேட்கவில்லை. அண்ணார்கள் தாத்தாவிடம் எல்லா விவரங்களையும் கேட்டு தெரிந்து கொண்டிருப்பார்கள். அதனால்தான் எவரும் என்னிடம் எதுவும் கேட்கவில்லை என்று நினைத்துக் கொண்டேன்.

ஜவுளி அண்ணி 'பெண் பிடிக்கவில்லை என்று தாத்தாவிடம் சொல்லிவிட்டாயா?' என்று கேட்டார்.

‘பிடித்திருக்கிறது என்று சொல்லி விட்டேன்’ என்றேன்.

‘கிறுக்குப் பிள்ளையே! அப்படி ஏன் சொன்னாய்?’ என்றார் ஜவுளி அண்ணி.

‘பிடித்திருக்கிறதே’ என்றேன்.

‘வாழ்க்கையில் முதல் தடவையாக இளவயதுப் பெண்ணைப் பார்த்ததில் புத்தி கெட்டுப் போய் விட்டான். தாத்தா வாக்கு கொடுத்து விட்டாரா?’ என்றார் காபி அண்ணி.

‘இன்னமும் இல்லை. பெண்ணுக்கு என்னைப் பிடிக்க வேண்டுமாமே! தாத்தா சொன்னார்’ என்றேன்.

‘பரவாயில்லையே! தாத்தா பெண்கள் மனதைக் கூட புரிந்து கொள்ள முயற்சி செய்கிறாரே’ என்றார் ஜவுளி அண்ணி.

‘உங்கள் எல்லோரிடமும் தாத்தா அன்பாகத்தானே இருக்கிறார்’ என்றேன்.

‘எங்களிடம் அன்பாக இருந்து என்ன பிரயோஜனம்?’ என்றார் காபி அண்ணி.

‘பெண் என்ன சேலை கட்டியிருந்தாள்?’ என்று ஜவுளி அண்ணி.

‘சரியாக கவனிக்கவில்லை’ என்றேன்.

‘சேலையையே கவனிக்கவில்லை. நகையைத்தானா பார்த்திருக்கப் போகிறாய்?’ என்று சொன்னார் ஜவுளி அண்ணி.

‘முகத்தையாவது பார்த்தாயா?’ என்றார் காபி அண்ணி.

‘நல்ல பெண் அண்ணி’ என்றேன்.

‘எதை வைத்துச் சொல்கிறாய்?’ என்று கேட்டார் ஜவுளி அண்ணி.

‘பார்த்ததும் பிடித்ததே’ என்றேன்.

‘அது மட்டும் போதுமா?’ என்று கேட்டார் காபி அண்ணி.

‘எனக்கு போதும்தான். மேலும் தனியாகப் பேசியும் பார்த்தேனே’ என்றேன்.

‘நீயா’ என்று இரண்டு அண்ணிகளும் அதிர்ச்சியுடன் கேட்டனர்.

‘தாத்தா பேசச் சொன்னாரே’ என்றேன்.



‘அதுதானே பார்த்தேன்’ என்றார் ஜவுளி அண்ணி.

‘தனியாகப் பேசினாயா? விவரமாகச் சொல்’ என்று ஆர்வத்துடன் கேட்டார் காபி அண்ணி.

‘பேசாமல் இருடி. சின்னப் பிள்ளையை கேலி செய்யாதே’ என்றார் ஜவுளி அண்ணி.

‘நீங்களும் கேட்க மாட்டீர்கள். என்னையும் கேட்க விட மாட்டீர்கள்’ என்று நொடித்துக் கொண்டார் காபி அண்ணி.

மதுரைக்குச் சென்று திரும்பிய மூன்றாவது நாள் தாத்தா எல்லோரையும் தன் அறைக்கு அழைத்தார்.

‘வரும் ஐந்தாம் தேதி பரமனுக்கு கல்யாணம் நடத்தி விடலாம்’ என்றார்.

‘இன்னும் இரண்டு வாரங்களிலா?’ என்றார் ஜவுளி அண்ணி சற்று திகைப்புடன்.

‘இப்போதெல்லாம் நல்ல மண்டபத்தை ஆறு மாதங்களுக்கு முன்பே பதிவு செய்ய வேண்டும்’ என்றார் புருஷண்ணார்.

‘புதிதாக தென்றல் ஹோட்டல் கட்டியிருக்கிறார்களே. அதிலிருக்கும் மண்டபத்தை பதிவு செய்து விட்டேன்’ என்றார் தாத்தா.

‘அது மிகவும் சின்ன ஹோட்டல். மண்டபமும் சிறியது. இருநூறு பேர்களைத்தான் கொள்ளும்’ என்றார் மதுவண்ணார்.

‘நம் சார்பில் நூறு பேர்களைக் கூப்பிட்டால் போதும்’ என்ற தாத்தா புருஷண்ணாருக்கும், மதுவண்ணாருக்கும் ஆளுக்கு பத்து அழைப்பிதழ்களைக் கொடுத்தார். ‘கூட வேண்டுமானால் நீங்கள் அச்சடித்துக் கொள்ளுங்கள்’ என்றார். எதுவும் பேசாமல் அண்ணார்கள் வாங்கிக் கொண்டார்கள்.

‘உனக்கு எத்தனை வேண்டும்? இரண்டுதான் தேவைப்படும் என்று நினைக்கிறேன்’ என்று என்னிடம் சொன்னார் தாத்தா.

தீவிரமாக யோசித்தேன். ‘மூன்று தேவைப்படும்’ என்றேன்.

‘யாரந்த புதிய நண்பன்?’ என்றார் தாத்தா.

‘மாதிரிக்கு எனக்கொன்று வேண்டுமே’ என்றேன்.

‘எங்கள் எல்லோருக்கும் விமரிசையாக கல்யாணம் நடந்தது. பரமனுக்கும் அதே போல நடத்தி விடலாமே’ என்றார் ஜவுளி அண்ணி.

‘இவன் படிப்பிற்கும், சம்பாத்தியத்திற்கும் இதுவே அதிகம்’ என்றார் தாத்தா.

வெளியே வந்ததும் ஜவுளி அண்ணி வருத்தப்பட்டார். ‘தாத்தா வரவர விசித்திரமாக நடந்து கொள்கிறார். கல்யாணம் வாழ்க்கையில் ஒரே ஒரு தடவை நடப்பது. எதற்குமே கணக்கு பார்க்காதவர் இதற்கு போய் கணக்கு பார்க்கிறார்’ என்றார்.

‘ஒரு வகையில் நல்லதுதான். நம் செலவில் சாப்பிட்டுவிட்டு எதுவும் நன்றாக இல்லை என்று சொல்லிவிட்டுப் போகிறவர்களுக்காக வீண் செலவு செய்யத் தேவையில்லை’ என்றார் கவர்னசத்தை.

அன்றிரவு என்னை தாத்தா அழைத்தார். ஒட்டப்பட்டிருந்த இரண்டு காகித உறைகளைத் தந்தார். ஒன்றின் மீது மதுரை மாமா பெயரும் மற்றொன்றின் மீது ஜமுனாவின் பெயரும் எழுதப்பட்டிருந்தன.

‘மதுரைக்கு நேரில் போய்க் கொடு’ என்றார். கையில் ஒரு ரயில் டிக்கெட்டையும் சிறிது பணத்தையும் தந்தார்.

## 10. மீண்டும் ஜமுனா

மறுநாள் காலையில் கிளம்பி இரண்டு மணிக்கு மதுரை சென்றடைந்தேன். மீனாட்சி அம்மன் கோவிலருகே ஒரு விடுதியில் தங்கினேன். உடனே மாமா வீட்டிற்குப் போக வேண்டும் என்று தோன்றினாலும் ஆறு மணிவரை காத்திருந்தேன்.

என்னிடம் புதிய சாம்பல் நிற கால்சட்டையும், வெள்ளையில் மெல்லிய நீல கட்டங்கள் போட்ட புதிய சட்டையும் இருந்தன. மடிப்பு கலையாமல் அவற்றை அணிந்து கொண்டு,



பளபளப்பேற்றப்பட்ட காலணிகளை போட்டுக் கொண்டு மாமா வீட்டிற்குக் கிளம்பினேன்.

கிழக்கு வாசல் கோபுரத்தைக் கடக்கும் போது கூடையில் பூ விற்றுக் கொண்டிருந்த பெண்ணிடம் ‘இருநூறு பூ கொடு’ என்று கேட்டுக் கொண்டிருந்த ஜமுனாவைப் பார்த்தேன்.

யதேச்சையாக பக்கவாட்டில் திரும்பிய ஜமுனா என்னைப் பார்த்து புன்னகைத்தாள்.

நிச்சயமாகி விட்டதால் என்னைப் பார்க்கும் போது வெட்கப்படுவாள். அப்போது பாரதியாரின் நாணிக் கண்புதைத்தல் பாடலைச் சொல்ல வேண்டும் என்ற திட்டத்தோடு வந்த எனக்கு சற்று ஏமாற்றமாக இருந்தது. என் வாழ்வில் இதுவரை எந்த திட்டமும் போட்டதில்லை. போட்ட ஒரே திட்டமும் படுதோல்வி அடைந்துவிட்டது.

‘வாருங்கள். மதுரை வந்தது வாத்தியார் வீட்டு மீனாட்சியைப் பார்க்கவா அல்லது சொக்கநாதர் வீட்டு மீனாட்சியைப் பார்க்கவா?’ என்று கேட்டாள் ஜமுனா.

‘தாத்தா இரண்டு கடிதங்களை நேரில் கொடுத்து விட்டு வரச் சொன்னார்’ என்று கூறி கடிதங்களை ஜமுனாவிடம் கொடுத்தேன். ‘எதற்கு இருநூறு முழம் பூ வாங்குகிறீர்கள்?’ என்று கேட்டேன்.

சிரித்தாள். ‘இந்த ஊரில் எண்ணிக்கை கணக்கு. நம் ஊரில்தான் முழக் கணக்கு. இருநூறு பூக்களை நெருக்கிக் கட்டினால் ஒரு முழம் வரும். தள்ளி கட்டி எட்டு முழமாக்கும் சாமர்த்தியசாலிகளும் உண்டு’ என்றாள் ஜமுனா.

‘இதுவரை நான் பூ வாங்கியதில்லை’ என்றேன்.

‘இனி தினமும் வாங்க வேண்டியிருக்கும். என்னால் ஒரு நாள் கூட மல்லிகை இல்லாமல் இருக்க முடியாது. மதுரையில் வருடம் பூரா மல்லிகை கிடைக்கும்’ என்றாள் ஜமுனா.

‘சென்னையில் சீசனுக்கேற்றாற் போல் பூ கிடைக்கும்’ என்றேன்.

‘பூ வாங்கியதில்லை என்று இப்போது சொல்லவில்லையா?’ என்று கேட்டாள் ஜமுனா.

‘அண்ணிகள் வாங்குவார்களே’ என்றேன். பின் ‘பதினைந்து வயதிலிருந்து வீட்டு வேலை பார்ப்பது கஷ்டமாக இல்லையா?’ என்று கேட்டேன்.

‘இல்லையே! அவசியத்தை அறிந்து ஆர்வத்தோடு செய்தால் எதுவும் கஷ்டமாக இல்லை’ என்றாள் ஜமுனா.

எதிரே இரண்டு போலீஸ் பெண்கள் சீருடையில் சென்றனர். ‘பதினைந்து வயதில் என் தோழிகள் சாரணர் பயிற்சிக்குப் போனார்கள். என்னையும் கூப்பிட்டார்கள். யூனிபார்ம் போட்டுக் கொண்டு அவர்கள் போவதைப் பார்த்த போது எனக்கும் ஒரு வினாடி போக வேண்டும் என்று ஆசை தோன்றியது. ஆனால் அதிகாலையில் பயிற்சிக்குப் போனால் வீட்டு வேலையை யார் பார்ப்பது? இப்படி எப்போதாவது சின்ன ஆசைகள் வந்து உடனே போய்விடும்’ என்றாள் ஜமுனா.

எனக்குத் துக்கமாக இருந்தது.

‘திரும்பி வராத இளமையில் நிறைவேறாத ஆசை இழப்பு என்று சொல்வார்களே?’ என்றேன்.

‘காலத்திற்குக் கட்டுப்படுபவர்கள்தான் இழப்பு, இறப்பு பற்றி பேசி கவலைப்படுவார்கள். நமக்கென்ன?’ என்றாள் ஜமுனா.

‘குழந்தையை வீட்டு வேலை செய்ய வைப்பது தப்பில்லையா? மாமாவும், அத்தையும் எப்படி இதை ஏற்றுக் கொண்டார்கள்?’ என்றேன்.

‘அப்பாவும், அம்மாவும் ‘எந்த வேலையும் செய்யாதே, வேலையாள் வைத்துக் கொள்ளலாம்’ என்றுதான் சொன்னார்கள். என்னை விடுதியில் போய் இருக்கும்படி கூடச் சொன்னார்கள். வீட்டு நிதி நிலைமை எனக்குத் தெரியாதா?’ என்றாள் ஜமுனா.

‘அதெல்லாம் பதினைந்து வயதிலே புரியுமா? எனக்கு இருபத்தைந்து வயதாகியும் பணத்தைப் பற்றி ஒன்றும் புரியவில்லையே! எது எப்படி இருந்தாலும் பதினைந்து வயது விளையாட வேண்டிய வயது’ என்றேன்.

‘நான்தான் பிடிவாதமாக எங்கள் வீட்டுப் பொறுப்பை எடுத்துக் கொண்டேன்’ என்றாள் ஜமுனா.

‘நீங்கள் ரொம்ப பிடிவாதக்காரியோ?’என்று கேட்டேன்.



‘எல்லோரும் அப்படித்தான் சொல்கிறார்கள். ‘என்னால்தான் உன் சின்ன வயது சந்தோஷமெல்லாம் கெட்டுப் போய் விட்டது’ என்று இன்று கூட அம்மா புலம்புவார். இத்தனை வருஷம் அம்மா வீட்டுப் பொறுப்பில்லாமல் நடந்து கொண்டார் என்று மற்றவர்கள் நினைக்கிறார்கள். உண்மையில் அவர் ஒவ்வொரு நிமிஷமும் எங்களுக்காகத்தான் உழைக்கிறார். விழித்திருக்கும் நேரமெல்லாம் எனக்கும், சுந்தரத்திற்கும் அதிர்ஷ்டம் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறார். அதனால்தான் நீங்கள் அவருக்கு மாப்பிள்ளையாக அமைந்தீர்களாம்’ என்று கூறிச் சிரித்தாள் ஜமுனா. பின் ‘கோவிலுக்குப் போக வேண்டுமா?’ என்று கேட்டாள்.

‘நீங்கள் சொன்னால் போவோம்’ என்றேன்.

‘போவதில்லையா?’ என்றாள் ஜமுனா.

‘பூஜை செய்யப் போவதில்லை. ஆனால் புராதன கட்டடம் எதைப் பார்த்தாலும் உள்ளே நுழைந்து விடுவேன். கோவில், கோபுரங்கள், மண்டபங்கள், சிற்பங்கள் இவையெல்லாமே ஒரு மாபெரும் பண்பாட்டு சாரத்தின் பல்வேறு ரூபங்கள். அவற்றைப் பார்ப்பதற்காகப் போவேன். இது போன்ற கோவிலுக்குள் நுழைந்தால் வெளியே வர குறைந்தது நான்கு மணி நேரமாகும்’ என்றேன்.

‘அதனால்தான் விஷயம் தெரியாமல் உங்களை பக்திமான், ஞானவான் என்றார்களோ?’ என்றாள் ஜமுனா.

‘இன்னொரு ரக ஆட்களும் உண்டு. தங்களை புதுமை-யானவர்களாக நினைத்துக் கொள்பவர்கள் என்னைப் பற்றி மரபுக்காரன், பழைய பஞ்சாங்கம், புதுமைக்குப் புறம்பானவன் என்றும் உங்களிடம் சொல்லியிருக்கக் கூடும்’ என்றேன்.

‘அப்படியும் சிலர் சொன்னார்கள்தான்’ என்றாள் ஜமுனா.

‘நான் பொதுவாக இவை போன்ற விஷயங்களைப் பற்றி எந்த முடிவும், கருத்தும் வைத்துக் கொள்வதில்லை. அவர்கள் சொன்னதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?’ என்றேன்.

சிரித்தாள் ஜமுனா. ‘அதைப் பற்றி நானெதுவும் நினைக்கவில்லை’ என்றாள். பூக்காரிக்கு பணம் கொடுத்துவிட்டு

‘வாருங்கள், நடந்து கொண்டே பேசுவோம்’ என்று கூறி வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினாள் ஜமுனா. வீதியில் நடக்கும் எல்லோரும் எங்களையே பார்ப்பது போலத் தோன்றியது.

‘கோபுரம் எவ்வளவு பெரியதாக இருக்கிறது’ என்றேன்.

‘இந்த கோபுரத்தை கட்டுவதற்கு மூவாயிரம் வருஷங்களுக்கு முன்பே இதைப் போல மூன்று மடங்கு உயரமான பிரமிடுகளை எகிப்தில் கட்டியிருக்கிறார்கள். சமாதிக்கே அவ்வளவு பெரிய கட்டடம் என்றால் கோவில் கோபுரத்தை பிரமிடைப் போல பத்து மடங்கு பெரியதாகக் கட்ட வேண்டாமா?’ என்றாள் ஜமுனா.

‘அதை விடுங்கள். என்னைப் பற்றி ஒன்றுமே தெரியாமலா கல்யாணத்திற்குச் சம்மதித்தீர்கள்?’ என்று கேட்டேன்.

‘அடுத்தவர்கள் சொல்வதைப் பற்றி நானெதுவும் நினைக்கவில்லை என்றுதான் சொன்னேன். உங்களைப் பார்த்தபோது உங்களோடு ஒன்றானது போல ஒரு உணர்வு. அப்போதே உங்களைப் பற்றி தெரிந்து கொண்டேன். இனி தெரிந்து கொள்ள எதுவுமில்லை’ என்றாள் ஜமுனா.

‘எனக்கு உங்களைப் பற்றி எதுவும் தெரியவில்லையே’ என்றேன்.

‘என்ன செய்யலாம்?’ என்று கேட்டாள் ஜமுனா.

‘உங்கள் செல்போன் எண் என்ன?’ என்றேன்

‘பணம் எங்களுக்கு பாலைவனத்துக் குடிநீர் போல. அப்பாவிடம் மட்டும்தான் செல்போன் இருக்கிறது. எல்லோரும் அதில்தான் பேசுவோம்’ என்றாள் ஜமுனா.

‘கல்யாண வேலைகள் பற்றி ஏதாவது பேச வேண்டுமானால் எப்படி தொடர்பு கொள்வது?’ என்றேன்.

‘அப்பா நம்பரைக் கூப்பிடுங்களேன். கல்யாண வேலைகளில் அழகுபடுத்திக் கொள்வது, தாலி கட்டிக் கொள்வதைத் தவிர வேறென்ன வேலை எனக்கு இருக்கிறது?’ என்றாள் ஜமுனா.



‘உங்கள் வீடு இருக்குமிடம் தெரியும். விலாசம் தெரியாது. சரியான வீட்டு விலாசத்தைக் கொடுங்கள். ஏதாவது முக்கியமான கடிதம் அனுப்ப வேண்டிவரும்’ என்றேன்.

‘நீங்கள்தான் நேரிலேயே வந்து கடிதம் தருகிறீர்களே? தாத்தா விலாசம் வைத்திருக்கிறார். அவரிடம் கேட்டு வாங்கிக் கொள்ளுங்கள்’ என்றாள் ஜமுனா.

‘தனிப்பட்ட விஷயம் என்றால் எப்படி தொடர்பு கொள்வது?’ என்று கேட்டேன்.

‘குடும்பம் ஊரைக் கூட்டி கல்யாணத்தை நடத்துகிறது. இதிலென்ன பிரைவெசி வேண்டியிருக்கிறது?’ என்றாள் ஜமுனா.

இதற்கு மேல் ஜமுனாவிடம் எப்படி என் விருப்பத்தை விளக்குவது என்று புரியாமல் திகைத்தேன்.

என்னைச் சிறிது நேரம் தவிக்க விட்டபின் ‘என்னோடு அடிக்கடி பேச வேண்டுமாக்கும்?’ என்று கேட்டாள்.

‘ஆமாம். கல்யாணத்திற்கு முன்னால் அடிக்கடி பேசினால் உங்களைப் புரிந்து கொள்ள முடியும் என்று காபி அண்ணி சொல்லிக் கொடுத்தார். அதனால்தான் போன் நம்பர் கேட்கிறேன்’ என்றேன்.

‘அதை நேரடியாக கேட்பதுதானே? வீட்டிற்கு எதிரே பத்திரத்தாள் கடை இருக்கிறதே. மதியம் ஒரு மணியிலிருந்து இரண்டு மணி வரை நான் மட்டும்தான் அங்கிருப்பேன். அந்த கடையின் போன் நம்பர் தருகிறேன்’ என்றாள் ஜமுனா.

‘வேலை பார்க்கிறீர்களா?’ என்று கேட்டேன்.

‘இல்லை. உதவியாக இருக்கிறேன். கடை உரிமையாளர் அப்பாவின் பால்ய சிநேகிதர். மதியம் அவர் சாப்பிடப் போய் திரும்பும் வரை பார்த்துக் கொள்ள முடியுமா என்று கேட்டுக் கொண்டார். அதனால் செய்கிறேன். சம்பளம் தருகிறேன் என்றார். வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். பணத்திற்காக மனிதர்கள் என்னவெல்லாம் செய்வார்கள் என்று பத்திரத்தாள் கடையில் இருப்பதால் தெரிந்து கொள்ள முடிந்தது’ என்றாள் ஜமுனா.

நாங்கள் வீட்டை அடைந்தபோதுதான், மாமாவும் திரும்பியிருந்தார். வழக்கமான விருந்தோம்பலுக்குப் பின் மாமா என்னிடம் பேசிக் கொண்டிருந்தபோது ஜமுனா கடிதங்களை வாசித்தாள். பின் அவற்றை மாமாவிடம் தந்தாள். 'பெரியவர் என்ன எழுதியிருக்கிறார்? சொன்னால் மாப்பிள்ளையும் தெரிந்து கொள்வாரே' என்றார் மாமா.

'கல்யாணச் செலவு எவ்வளவு ஆகும் என்று கணக்கு எழுதியிருக்கிறார். அதில் சரிபாதி நீங்கள் கொடுத்துவிட வேண்டும் என்கிறார்' என்றாள் ஜமுனா.

'ஆமாம். தொகையை இவரிடமே கொடுத்து விடலாம்' என்றார் மதுரை மாமா. 'உனக்கு என்னம்மா எழுதியிருக்கிறார்?'என்று கேட்டார்.

'எனக்கொரு செக் அனுப்பியிருக்கிறார். கல்யாணத்திற்கு என்னவெல்லாம் தேவையோ அதையெல்லாம் வாங்கிக் கொள்ளச் சொல்லியிருக்கிறார்' என்றாள் ஜமுனா.

'பெரிய மனசு!' என்றார் மதுரை அத்தை.

'என்ன செய்யலாம்?' என்றார் மதுரை மாமா.

'செக்கை திருப்பி அனுப்பி விடலாம்' என்றாள் ஜமுனா.

அத்தை 'வேண்டாம், தாத்தாவை அவமரியாதை செய்யாதே' என்று பல முறை கூறியும் ஜமுனா செக்கை திருப்பித் தந்து விட்டாள். கல்யாண செலவிற்கான பாதி பணத்தையும் அவள் மூலம்தான் மாமா என்னிடம் கொடுத்தார்.

சென்னை திரும்பியதும் தாத்தாவின் அறைக்குச் சென்று பணத்தையும், செக்கையும் தந்தபோது 'வைத்திரு, அப்புறம் வாங்கிக் கொள்கிறேன்' என்றார்.

மறுநாள் எல்லோரும் சேர்ந்து சாப்பிடும்போது 'மதுரை வாத்தியார் என்ன சொன்னார்?' என்று புதிதாகக் கேட்பவர் போல் கேட்டார் தாத்தா.

'நீங்கள் கல்யாண செலவிற்காக கேட்ட பணத்தை கொடுத்துவிட்டார்' என்றேன்.



'ஜமுனாவிற்கு நான் கொடுத்த அன்பளிப்பு செக்கை ஆவலாதியாய் வாங்கிக் கொண்டு விட்டாளா?' என்று கேட்டார் தாத்தா.

'இல்லை. வேண்டாம் என்று திருப்பிக் கொடுத்து விட்டாள்' என்றேன்.

'நான்தான் அவள் திமிர் பிடித்தவள். அகராதி என்று அன்றே சொன்னேனே?' என்றார் கவர்னசத்தை.

தாத்தா பார்க்காதபோது ஜவுளி அண்ணி என்னைப் பார்த்து புன்னகைத்தார். தனிமையில் 'நீ தாத்தாவின் கூட்டுக் களவாணிதானே?' என்று கூறிச் சிரித்தார்.

'எனக்குப் புரியவில்லை' என்றேன்.

அடுத்து வந்த நாட்களில் திருமணத்தை எப்படி நடத்த வேண்டும் என்று எவராலும் சொல்ல முடியவில்லை. முதல் காரணம் தாத்தாவே எல்லாவற்றையும் ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். இரண்டாவது காரணம் அவர் போட்டிருந்த பட்ஜெட்டில் அவரைத் தவிர வேறு எவராலும் எதுவும் செய்து விட முடியாது.

எல்லா திருமணங்களிலும் முக்கிய பங்கு எடுத்த கவர்னசத்தைக்கு, என் திருமணத்தில் பெண் பார்ப்பதைத் தவிர ஒரு பங்கும் கிடைக்கவில்லையே என்ற கவலை வந்துவிட்டது.

அதனால் புரோகிதர் விஷயத்தில் தலையிட்டார். தனக்குத் தெரிந்த ஸ்ரீ மாசிலாமணி சுவாமிகள்தான் திருமணத்தை நடத்தி வைக்க வேண்டும் என்றார்.

தாத்தா 'சாமியாருக்கும், சம்சாரத்திற்கும் என்ன சம்பந்தம்? நல்ல மனிதர்கள் எவரேனும் தாலி எடுத்துத் தரட்டும். இவன் தாலி கட்டட்டும். அது போதும்' என்றார்.

நானும் அதையே விரும்பினேன். காரணம் அதைத்தான் ஜமுனா விரும்பியிருந்தாள். அவளுக்கு எந்தச் சடங்கிலும் நம்பிக்கை கிடையாது.

ஆனால் இதே விஷயத்தை கவர்னசத்தை மீண்டும் மீண்டும் பேசிக் கொண்டிருந்தார். 'சரி, என்னவோ செய்' என்று கூறி விட்டார் தாத்தா.

இது பற்றி ஜமுனாவிடம் போனில் சொன்னேன். தினமும் ஜமுனாவிடம் நாள் முழுவதும் போனில் நான் பேச விரும்பினாலும், அவள் நான்கைந்து நிமிடங்கள் மட்டுமே பேசினாள். ‘பத்திரங்களை அடுக்கிக் கொண்டிருக்கிறேன்’ என்று கூறி போனை வைத்து விடுவாள்.

‘ஸ்ரீ மாசிலாமணி சுவாமிகளே கல்யாணத்தை நடத்தட்டும். நமக்கென்ன?’ என்றாள் ஜமுனா.

‘இது நம் கல்யாணம்’ என்றேன்.

‘அடுத்தவர்களுக்காகத்தானே கல்யாணமே செய்து கொள்கிறோம்? யாருக்கு எதை நிரூபிக்க வேண்டும்? என்னைக் கேட்டால் மனம் ஒத்துப் போனால் உடனே சேர்ந்து வாழலாம் என்றுதான் சொல்வேன்’ என்றாள் ஜமுனா.

‘கல்யாணம் பண்ணிக் கொள்ளாமலா?’ என்று சற்று அதிர்ச்சியுடன் கேட்டேன்.

‘ஆமாம். ஆனால் நீங்கள் பயப்படுவீர்களே!’ என்று கூறி சிரித்த ஜமுனா ‘எதனை பொருட்படுத்துகிறோமோ, அதுதானே நம்மைப் பாதிக்கும்? விடுபட்ட மன நிலையில் இருங்களேன்’ என்றாள்.

அதன் பின் நான் புரோகிதரைப் பற்றியோ, சடங்குகளைப் பற்றியோ நினைக்கக் கூட இல்லை.

*(அடுத்து வரும் சில மாதங்களில் மலர்ந்த ஜீவியத்தில் 39 அத்தியாயங்கள் கொண்ட மீன்கொடி தொடர்ந்து வெளியாகும். கால இடைவெளியின்றி உடனே தொடர்ந்து வாசித்து முடிக்க விரும்பும் அன்பர்கள்* **cs@motherservice.net** *என்ற மின்னஞ்சல் முகவரியில் என்னைத் தொடர்பு கொண்டால் முழு நாவலும்* **PDF** *வடிவத்தில் அனுப்பி வைக்கப்படும்)*

(தொடரும்)

★★★

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605 011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605 008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Pappammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605 012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605 011.

# ராஜாஜி - நேரு

ஜாதகம் பலிக்கும். சுபாவம் மாறாது. செய்த செயலுக்குப் பலருண்டு. ஜமீன்தார் சுப்பராயனுடைய எஸ்டேட் மேனேஜர் ராஜாஜியின் தகப்பனார் என்பது செய்தி. ராஜாஜி பிறந்து ஜாதகம் கணித்த பொழுது இந்த ஜாதகன் வைஸ்ராயாவான் என்றனர். தகப்பனார் மணியக்காரர். இரு பிள்ளைகளை பெங்களூர் அனுப்பி B. A. படிக்க வைத்தார். வக்கீலாக ராஜாஜி பிரபலமானார். காந்திஜியை, சந்தித்து தொழிலை விட்டு செட்டியார் சம்பந்தியாகி காந்தியின் வாரிசாக பவனி வந்தார். அயல்நாட்டு அரசியல்வாதிகள் அனைவரும் அவரைப் போற்றினர். நேரு ராஜாஜியின் அறிவை அறிந்தவர். வாதத்தில் எதிர்வாதம் உண்டு. எதை நம்பிவாதம் எழுகிறதோ, அதையே தவறு என ராஜாஜி நிரூபிப்பார் என நேரு கூறுகிறார். *பிறப்பு, வளர்ப்பு, ஜாதகம், சேவை, தியாகம், அறிவு, ஞானம் ஆகியவற்றைக் கருதினால் இந்தியாவிற்கு முதல் பிரதமராக ஆயுள் முழுவதும் தகுதியுடையவர்.* தவறினால், ஜனாதிபதியாக அது-போலிருக்க வேண்டியவர். அந்த நாள் தலைவர்கள் பதவி கேட்கமாட்டார்கள். பிரசாத் அசெம்பிளி தலைவர். ராஜாஜி கவர்னர் ஜெனரலாக இருந்த பொழுது முதல் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு நேரு, பட்டேலுக்குண்டு. நேரு ராஜாஜியே வர வேண்டும் என முடிவு செய்து அதைப் பின்பற்றுகிறார். பிரசாத் வட இந்தியர் மனதில் உள்ளவர். பிரசாத் கேட்கவில்லை.

(தொடர்ச்சி பின்பக்க அட்டையில்)

(முன்பக்க அட்டை தொடர்ச்சி)

அதனால் பட்டேலும், நேருவும் கலந்து ராஜேந்திரப் பிரசாத் ராஜாஜியை ஜனாதிபதியாக முன்மொழிந்தால், எலக்ஷன் சுமுகமாக இருக்கும், கவர்னர் ஜெனரல் ஜனாதிபதியாவது தொடரும் நிலை என நேரு பிரசாத்திற்கு எழுதினார். “நான் ஜனாதிபதியாக இருக்க விரும்பினேன்” என்று சொல்வது சரியில்லை என்றார் பிரசாத். வட இந்தியருக்கும் பெரும்பாலும் தென்னிந்தியருக்கும் ராஜாஜியைவிட மற்ற எவர் வந்தாலும் சரி என்ற அபிப்பிராயம். எலக்ஷன் என நடக்கும்முன் பெருவாரியான கட்சியினர் ராஜேந்திர பிரசாத்தை ஆதரிப்பதைத் தெரிந்து நேரு பட்டேலுக்கு “ராஜேந்திரப் பிரசாத் ஜனாதிபதியானால் நான் பிரதமராக இருக்க மாட்டேன்” என எழுதினார். பட்டேல் படித்துச் சிரித்தார். இவ்வளவு மேலிட ஆதரவு இருந்தும் ராஜாஜிக்கு அது கிட்டவில்லை.

- சுபாவம் செயல்படும். அவர் சுபாவம் அனைவரையும் எதிர்த்துக் கொண்டது.
- செய்த செயலும், சொல்லிய சொல்லும் பலிக்கும். காங்கிரஸிலிருந்து விலகி பெரும்-பாடுபட்டுச் சேர்ந்த செயல் தடையாயிற்று.
- ஜாதகம் பலித்தது.